பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

மங்களவைபவங்களுக்
கேற்ப, உடுபுடைவைகள்

ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கப்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை
ரூ 2. 50

★ காஞ்சிபுரம்
★ பெனாரிஸ்
★ கெவி தஞ்சூர்
★ பாட்லி
★ பட்டுவேஷ்டிகள்
மற்றும் சகலவிதமான
பிளவ்ஸ் பீஸ் வகைகளுக்கும்
ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கப்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

கலி: 4 விபவ ஞூ தை மீ 14 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1409 ஜ ஆகிர் பிறை 18 (27-01-1989) UTHAYAN -A LIVELY TAMIL DAILY கதிர்: 55

## தென்பகுதியில் 24 மணித்தியாலத்தில் 46 பேர் கொலை!

### வன்செயலைக் கட்டுப்படுத்துவதற்கு படையினருக்கு கூடுதல் அதிகாரங்கள்

கொழும்பு, ஜனவரி 27

தென்பகுதியில் ஜனாதிபதித் தேர்தலை அடுத்து வெகுவாகக் குறைந்திருந்த வன்செயல்கள், மீண்டும் தலைதூக்கி இருக்கின்றன.

கடந்த 24 மணி நேரத்தில் அங்கு 46 பேர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இதேசமயம் வன்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்காக ஆயுதப்படையினருக்கு கூடுதலான அதிகாரங்களும், ஆயுதங்களும் வழங்கப்பட்டிருப்பதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

பி பி சி. செய்தி அறிக்கையின்படி—

கண்டியில் நேற்று ஐக்கிய சோஷலிச முன்னணி வேட்பாளர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரின் ஐந்து உறவினர்களும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கண்டியில் இடம்பெற்ற இன்னொரு சம்பவத்தில் 7 பேர் கொல்லப்பட்டனர். அவர்களில் மூவர் ஒரே குடும்பத்தைச்சேர்ந்தவர்கள்

களுத்துறையில் ஐந்து பேர் சுட்டுக் கொலலப்பட்டனர்.

எஞ்சிய 29 பேரும் தென் மாகாணத்தில் வைத்து இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இவர்களில் பெரும்பாலானோர் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் என்று சொல்லப்படுகிறது

இதுவரை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் 8 வேட்பாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்,

வன்செயல்கள் அதிகரித்திருப்பதைத் தொடர்ந்து, பொதுசனப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தேடுதல் நடத்தித் தீவிரவாதிகளைப் பிடிக்க இராணுவத்துக்கு அரசு அதிகாரம் வழங்கியிருக்கிறது.

— இப்படி பி பி. சிச் செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (உ-9)

## இன்று பதவியேற்கும் தமிழக அமைச்சர்கள்

சென்னை, ஜன 27

முதலமைச்சர் மு. கருணாநிதி தலைமையில் 17 பேர் கொண்ட அமைச்சரவை இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு வள்ளுவர் கோட்டத்தில் பதவி ஏற்கிறது.

அமைச்சரவைப் பட்டியலை நேற்று கலைஞர் மு. கருணாநிதி ஆளுநர் பி. ஸி. அலெக்ஸாண்டரிடம் கையளித்தார்.

அதை ஆளுநர் ஏற்றுக்கொண்டார் என்று ராஜ்பவனில் இருந்து வெளியான அரசுக் குறிப்புத் தெரிவித்தது.

அமைச்சர்கள் விவரம் வருமாறு;

1. முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி. (உள்துறை நிதி-திட்டமிடல், தொழில், வணிக வரி, பிற்பட்டோர் நலம், பொதுநிர்வாகம்.)

2 பேராசிரியர் க.அன்பழகன்:(கல்வி,தொழிற்கல்வி, ஆட்சி மொழி, அறிவியல் தொழில்நுட்பம், அணு மின்துறை, தமிழர் பண்பாடு, விளையாட்டுத் துறை.)

3. சாதிக்பாட்சா:(சட்டம், நீதிமன்றங்கள்,

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் 12 பேருக்கு 'எயிட்ஸ்'!

கொழும்பு. ஜன 27

இலங்கையில் 12 பேருக்கு எயிட்ஸ் நோய் பீடித்துள்ளது.

இவர்களில் 5 பேர் வெளிநாட்டவர் அவர்கள் வெளிநாடு சென்று விட்டனர்.

எஞ்சிய 7 பேர் இலங்கையர். அவர்களில் 2 பேர் இறந்துவிட்டனர். ஒருவர் தலைமறைவாகி விட்டார், இன்னொருவர் வெளிநாடு சென்றுவிட்டார்.

ஏனைய மூவரும் சுகாதார அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு சிகிச்சைபெற்று வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது (உ-எ)

## பொலீஸ் சேவைக்கு மேலும் 32 ஆயிரம் பேர்

கொழும்பு, ஜன. 27

பொலீஸ் படையின் பலம் 59 ஆயிரமாக அதிகரிக்கப்படும்

தற்போது பொலீஸ் படையில் 27 ஆயிரம் வீரர்கள் பணிபுரிகின்றனர்.

ஒவ்வொரு பொலீஸ் நிலையத்துக்கும் 100 பொலீஸார் வீதம் மேலும் 32 ஆயிரம் பேர் பொலீஸ் படைக்கு திரட்டப்படுவர்.

நேற்று முன்தினம் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இப்படி தீர்மானிக்கப்பட்டது.

## வித்தியின் பூதவுடலுக்கு பலரும் நேற்று இறுதி அஞ்சலி

யாழ்ப்பாணம் ஜன 27

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தனின் பூதவுடல் விசேட விமானம் மூலம் நேற்று பலாலி விமான நிலையத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

அங்கிருந்து தெல்லிப்பழையில் உள்ள அவரது இல்லத்திற்கு நேற்றுப் பிற்பகலில் கொண்டு வரப்பட்ட பூதவுடல் தற்போது அங்கு அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கிறது.

நாளை சனிக்கிழமை இறுதிக் கிரியைகள் நடைபெறும் வரை அவரது வீட்டில் பொதுமக்களின் அஞ்சலிக்காக பூதவுடல் வைக்கப்பட்டிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள்,



விரிவுரையாளர்கள் அதிகாரிகள் பலரும், மாணவர்களும், மற்றும் பிரமுகர்களும் நேற்று மாலை காலஞ்சென்ற பேராசிரியரின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

தெல்லிப்பழை துர்க்கா தேவி அனாதை இல்லச் சிறுவர்கள் நேற்று திருமுறை ஓதினார்கள். இன்று இராமநாதன் நுண்கலைப் பீடத்தைச் சேர்ந்த மாணவிகள் திருமுறை ஓதுவர்.

பேராசிரியரின் பூதவுடல் நாளை பிற்பகல் 1 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து தகனக் கிரியைகளுக்காக தெல்லிப்பழை ஆஸ்பத்திரிக்கு அருகில் உள்ள மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். (அ-5)

### அஞ்சலி

வடக்கு - கிழக்கு முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாள் கொழும்பில் பேராசிரியர் வித்தியானந்தனின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினார்.

கொழும்பில் பல்கலைக்கழக லொட்ஜில் பேராசிரியரின் பூதவுடல் வைக்கப்பட்டிருந்தது.

திரு. வரதராஜப்பெருமாள் பேராசிரியர் வித்தியானந்தனின் மாணவராவார். (உ-எ)

## கான்ஸ்டபிள் குத்திக்கொலை

கொழும்பு, ஜன 27

கடந்த செவ்வாய் காலை ஹக்மனை பொலீஸ் நிலையத்துக்குள் புகுந்த ஆயுதம் தரித்த நான்கு பேர் அங்கு இருந்த சேர்ஜ் பொலீஸ் கான்ஸ்டபிள் திலக் ரூபசிங்காவை கத்தியால்குத்திக் கொன்றனர்.

பொலீஸ் நிலையத்தில் இருந்த 2 துப்பாக்கிகளையும் அக் கோஷ்டி அபகரித்துச் சென்றது. (ஒ-எ)

## மாகாண உறுப்பினருக்கு 5 மெய்ப்பாதுகாவலர்கள்

### ஆயுதங்களும் வழங்கப்படும்

திருகோணமலை, ஜன 27

மாகாணசபை உறுப்பினர்கள் தமது பாதுகாப்பிற்காக ஐந்து மெய்ப்பாது காவலர்களை அமர்த்தலாம். அவர்கள் ஐவருக்கும் ஆயுதங்கள் வழங்கப்படும்.

— வடக்கு, கிழக்கு மாகாணசபையின் முதல்வர் திரு அ. வரதராஜப்பெருமாள் இத்தகவலைத் தெரிவித்தார்.

மெய்ப்பாதுகாவலர்களுக்கு வழங்குவதற்கான ஆயுதங்கள் திருகோணமலை இராணுவ முகாமுக்கு ஏற்கனவே வந்து சேர்ந்துள்ளன.

ஐந்து மெய்ப்பாதுகாவலர்களுக்கும் மத்திய அரசு சம்பளம் வழங்கும்.

இதே சமயம் மாகாணசபை அங்கத்தவர்கள் தமக்குரிய உதவித் தொகையை இப்போது பெற்றுக்கொள்வது உசிதமல்ல. சபையின் நிதி நிலைமை சீரான பின்பு அதனைப் பெற்றுக்கொள்ளலாம். மாகாணசபைக்கு வந்துசேரும் பணம் எங்கும் ஓடிவிடாது.

-இப்படி அவர்மேலும் தெரிவித்தார். (உ-150)

### சுபநேரம்

27-01-1989
தை-14
வெள்ளிக்கிழமை
சுபநேரம்:
6 36 முதல் 8. 06 வரை
ராகுகாலம்:
11. 06 முதல்12 36வரை

## முச்சந்தி முரளி



ஏன் கனபேர் கலியாணம் கட்டாம இருக்கினம் எண்ட விசயம் இப்பதான் விளங்குது கண்டீரோ......!

### சுவாமிநாதனுக்கு பத்மவிபூஷண் விருது

புதுடில்லி ஜன 27

இந்தியக் குடியரசு தினத்தை ஒட்டி பிரபல விஞ்ஞானி டாக்டர் எம் எஸ் சுவாமிநாதனுக்கு பத்ம விபூஷண் விருது வழங்கப்பட்டது.

## 21 வீத தம்பதியரிடையே விசுவாசம் இல்லை!

### ஆய்வில் தகவல்

கொழும்பு, ஜன. 27

இலங்கையில் திருமணமானவர்களில் 21 சதவிதமான தம்பதிகள் தமக்குள் பரஸ்பரம் விசுவாசமாக நடந்து கொள்வதில்லை என்று ஆய்வு ஒன்றில் கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பல்கலைக் கழகத்தில் சமூகவியல் பிரிவு விரிவுரையாளர் டாக்டர் ஜோ வீரமுல நடத்திய ஆய்வு ஒன்றில் இது தெரியவந்தது.

இந்த ஆய்வுக்கு உலக சுகாதார ஸ்தாபன நிதி உதவி அளித்தது.

14 — 45 வயதுக்கு இடைப்பட்ட சுமார் 4 ஆயிரம் பேர் ஆய்வின் போது விசாரிக்கப்பட்டனர்.

ஆய்வு அறிக்கை விரைவில் வெளியிடப்படவுள்ளது. (உ-எ)

## ஸ்ரீலங்கா கடற்படையின் சூட்டுக்கு மீனவர் காயம்

எழுவைதீவு கடல் பகுதியில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர் ஒருவர் நேற்று ஸ்ரீலங்கா கடற்படையின் சூட்டுக்கு இலக்கானார்.

பி குட்டி (வயது 19) என்ற அந்த மீனவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார், அவர் ஆபத்தான நிலையில் இருக்கிறார் எனத் தெரிவிக்கப்பட்டது

ஊர்காவற்றுறையிலிருந்து அனலைதீவு நோக்கிச் சென்ற பயணிகள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ் இந்துக்கல்லூரியில் சூடு! ஆசிரியர் பலி!! 2 பேர் காயம்!!!

யாழ்ப்பாணம், ஜன 27

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்குள் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் அங்கு கல்வி போதித்துக் கொண்டிருந்த ஆசிரியர் ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

மற்றும் இரு ஆசிரியர்கள் காயமடைந்த நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்

நேற்றுநண்பகல் 11-30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

நல்லூர் ஆடியபாதம் வீதியைச் சேர்ந்த சண்முகம் சண்முகலிங்கம் (வயது 33) என்ற ஆசிரியரே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

கந்தசாமி தவமணிதாசன் (வயது 42), பாபு (வயது 28) ஆகிய இருவருமே காயமடைந்தனர்.

மக்கள் தொண்டர் படையினால் துரத்திச் செல்லப்பட்ட சிலர் பாடசாலை வளவிற்குள்ளால் ஓடியதாகவும் —

அதையடுத்துநிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திலேயே ஆசிரியர் பலியானதாகவும் இந்திய அமைதிப்படையின் நகரக் கமாண்டர் அலுவலகம் தெரிவித்தது

இந்தச் சம்பவம் குறித்து அதிபர் தலைமையில் சென்ற குழு ஒன்று

(8 ஆம் பக்கம் பார்க்க)

### யாழ் இந்து இன்று மூடப்பட்டிருக்கும்

யாழ்ப்பாணம். ஜன 27

யாழ் இந்துக்கல்லூரி ஆசிரியர் திரு. சண்முகலிங்கம் நேற்று கல்லூரியில் அகாலமரணமடைந்ததை ஒட்டி இன்று கல்லூரி மூடப்பட்டிருக்கும்.

கல்லூரியின் நிர்வாக வட்டாரங்கள் இத் தகவலைத் தெரிவித்தன.

## ஆயுதக் கோஷ்டியினர் வெளிக்குளத்தில் தாக்குதல்

### ஒருவர் வவுனியா ஆஸ்பத்திரியில்

வவுனியா, ஜன 27

கத்தி, வாள், துப்பாக்கி போன்ற ஆயுதங்களுடன் வந்த கோஷ்டியினர் ஹொரவப்பொத்தானை வீதியிலுள்ள எல்லைப்புறதமிழ்க்கிராமமான வெளிக்குளத்தில் புகுந்து தாக்குதல் நடத்தியுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு நடைபெற்ற சம்பவத்தின் போது ஒருவர் காயமடைந்து வவுனியா ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதனிடையில்மாமடுச் சந்தியில் அமைதிப்படையினர் நிலைகொண்டுள்ளனர்.

அத்துடன் இப்பகுதியின் எல்லைப் புறங்களில் உள்ள கிராமங்களிலுள்ள கிராமத்து இளைஞர்கள் இரவில் குழுக்களாக காவல் கடமையில் ஈடுபட்டுள்ளார்கள். (ஒ-164)

## நகரில் நேற்று 2 பொலீஸார் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜன. 27

யாழ்ப்பாணம் கொட்டடிப் பகுதியில் நேற்று நண்பகல் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இதில் இரு இந்திய ரிசேர்வ் பொலீஸார் கொல்லப்பட்டதாகவும், சிலர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ)



இன்று மங்களகரமான
புதுக்கடைத்
திறப்பு விழா
1989 - 01 - 27
வெள்ளிக்கிழமை
அன்பர்கள்,ஆதரவாளர்கள்
மனம் குளிர்ந்திட
நாவுக்குச் சுவையூட்டும்
தேனீர், பால் தேனீர்,
கோப்பி, பீடா
மற்றும்
சிற்றுண்டி வகைகள்,
குளிர்பான வகைகளை
அருந்தி மகிழ
ஓர் சிறந்த இடம்
செல்வ விலாஸ்
புகையிரதநிலைய வீதி,
சுன்னாகம்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Sansui Pioneer - five piece set உடன் விற்பனைக்கு உண்டு Fudo Enterprises, மின்சார நிலைய வீதி, 39/17, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (Shabra Samy & Co அருகாமையில்) (9236)

புதிய டீ பிரிசரும் இந்திய பிறிச்சும் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: தோர்த் அயன் என் ஜினியர்ஸ் 95, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் [கன்னாதிட்டி காளி கோவிலுக்கு முன்பாக] (9089)

### NEW CITY TRADERS

சகல விதமான T. V. டெக். ரேடியோ, அன்ரனா பூஸ்ரர், வயர் லைப் செற், T D K, Maxell Audio Video. சகற், வீட்டுக்குத் தேவையான மணிக்கூடு. சிறுவர் விளையாட்டுப் பொருள்களைப் பெற்றுக்கொள்ளச் சிறந்த ஸ்தாபனம்: New City Traders, 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் (C/1522)

### FOR SALE

Alsation Pups six (6) weeks old wormed and weaned Parents shepherd X silver gray. Pathinathan, Dutch Road, Uduvil. (9239

### கோழி விற்பனைக்கு

முட்டை இடும் பிராயத்தில் உள்ள 5 மாத Hyline சறுப்பு, லோமான் சிவப்பு கோழிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 117, சிவப்பிரகாசம் ரோட், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (9076)

### கோழிக்குஞ்சு விநியோகம் Uplands Farm

இரண்டு மாதத்தில் அதிக நிறையுள்ள வளர்ச்சியடையக் கூடிய (DEKALB) இன பிறவுன் சேவல் குஞ்சு (1- 2- 89) புதன் கிழமை விநியோகிக்கப்படும். விலை ரூபா 4. 50 முன் கூட்டியே பதிவுசெய்க. இல. 9 கந்தையாலேன் சுன்னாகம் (புகையிரத நிலையத்துக்கு அண்மையில்) (9222)

Bairaha Farm புறொயிலர் குஞ்சுகள் 2ஆந் திகதி வியாழக்கிழமையும், Golden Comet பிறவுன் பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் 3ஆந் திகதி வெள்ளிக்கிழமையும் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்ய: சற்குணராஜா அன் பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில் 9238)

### தேவை

சுன்னாகத்தில் உள்ள பிரபல விற்பனை நிலையத்தில் கடமையாற்ற இளம்பெண் விற்பனையாளர்கள் உடனடியாகத்தேவை. சைக்கிள் ஓடத் தெரிந்த சுன்னாகத்திற்கு அண்மையில் வசிப்போருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். விண்ணப்பமுகவரி, டைனமிக்ஸ், கந்தரோடை, சுன்னாகம். (9088)

### மணமகள் தேவை

அமெரிக்காவில் வேலை பார்க்கும் 31 வயதான இந்து வேளாளகுல மணமகனுக்கு நல்ல அழகு, குணமுடைய உயரமான தோற்றமுடைய பெண் தேவை. (செவ்வாய் குற்றமற்ற) நிச்சயமானால் இந்தியாவில் வைத்து விவாகம் செய்ய வேணும். சீதனம் எதிர்பார்க்கப்படும். விபரங்கள் சாதகக் குறிப்புடன் அனுப்பவும். இல. 30, C/o உதயன். (9090)

### தவறிவிட்டது

கணேஸ் ரவீந்திரன் ஆகிய எனது அடையாள அட்டை கொக்குவிலுக்கும் மனோகராச் சந்திக்கும் இடையில் K. K. S ரோட்டில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவுசெய்து C. A. சந்திரன், 395 - 665, K K S ரோட், யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். (9095)

## சேவை

யாழ் சைவீஸ் முதலாம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம் தினசரி இரவு7 30 வரை திறந்திருக்கும். அறைகள் வாடகைக்கும் உண்டு. (9207)

Type writers - தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் அத்துடன் சிறந்த முறையில் திருத்தவும் நாடுங்கள்: Fudo Enterprises, 39/17. மின்சாரநிலைய வீதி. 3ஆம் ஒழுங்கை. யாழ்ப்பாணம் [Samy & Co - Shabra அருகாமையில்] [C/1362]

---

உ
சிவமயம்

## ★ திருமண அழைப்பிதழ் ★

அன்புடையீர்!

நிகழும் விபவ ஆண்டு தை மாதம் 14ஆம் நாள் [27-01-1989] வெள்ளிக்கிழமை மாலை 14-55 மணி முதல் 16-43 மணிவரை உள்ள சிங்க லக்கின சுப முகூர்த்த வேளையில்

திரு. திருமதி கனகசபை அவர்களின் ஏகபுத்திரன் திருநிறை செல்வன்
**சிவகுமார்**
அவர்களுக்கும்

திரு. திருமதி செல்லத்துரை அவர்களின் சிரேஷ்ட புத்திரி திருநிறை செல்வி
**ஷாமினு**
அவர்களுக்கும்

திருவருள் துணைகொண்டு திருமணம் நடாத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் சுற்றஞ்சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திருமண வரவேற்பு உபசாரம் நடைபெறும் இடம்:
Fr Hals Straat - 38 Denhaae, NETHERLAND.
வரவேற்பு உபசாரம்: 27-01-1989 வெள்ளிக்கிழமை மாலை 18-00 மணி தொடக்கம் 21-00 மணி வரை.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு சு கனகசபை
"தேவபவனம்"
ஊரெழு மேற்கு,
சுன்னாகம்,
இலங்கை.

திரு. திருமதி வே செல்லத்துரை
"செத்துாரம்"
திருநெல்வேலி வடக்கு,
திருநெல்வேலி,
இலங்கை.

திரு க. சிவகுமார் — ஒல்லாந்து

[9295]

---

## அடிக்கல் நடுகை

யாழ்ப்பாணம் ஜன 27

தாவடி ஆரம்ப சுகாதாரக் கவனிப்பு நிலையத்துக்கான அடிக்கல் நடுகை வைபவம் இன்று 27 ஆம் திகதி காலை 9 மணிக்கு நடைபெறும்.

யாழ் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் எஸ். கனகசபை நிலையத்துக்கான அடிக்கல்லை நடுவார்.

சிறப்பு விருந்தினர்களாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயப் பிரதிநிதி ஒருவரும் உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. மகாலிங்கமும் கலந்து கொள்வார்கள். (ச)

## ஜே. ஆருக்கு அழைப்பு

கொழும்பு, ஜன. 27

ஜப்பானிய சக்கரவர்த்தி ஹிரோஹிட்டோவின் மரணச்சடங்குகளில் இலங்கை அரசின் சார்பில் கலந்து கொள்ளும்படி முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவை ஜனாதிபதி பிரேமதாஸ அழைத்திருக்கிறார். (இ - எ
)

---

மறுமலர்ச்சி மன்றம்

## அறிவித்தல்

பேராசிரியர் கலாநிதி சு.வித்தியானந்தன் அவர்களின் ஈமச்சடங்கு எதிர்வரும் 28 01 89 இல் நடைபெற இருப்பதால், அன்றைய தின மறுமலர்ச்சி மன்ற வெள்ளி விழா நிகழ்ச்சிகள் நடைபெற மாட்டாது என்பதை வருத்தத்துடன் அறியத்தருகின்றோம். 29-1-89 தின நிகழ்ச்சி நடைபெறும்.

க. தர்மராசா
செயலாளர்.

(9105)

---

## MOTOR RE-WINDING COURSE

THEORY - 8 WEEKS, PRACTICALS - 8 WEEKS: மோட்டர்கள், ரான்ஸ்போமர்கள், மின் விசிறிகள், மின் உபகரணங்கள் பிறர் உதவியின்றி நீங்களாகவே நீவைண்டிங் செய்ய பயிற்சி அளிக்கப்படும்

பயிற்சி ஆரம்பம்: 01.02.1989
முழுக்கட்டணம்: ரூபா 650/-

**OMEGA,** மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(ஈழ நாட்டிற்கு எதிரில்)

(9293)

---

## தாய்வான் வேலை வாய்ப்பு

தாய்வான் நாட்டில் தொழிற்சாலை வேலையாட்கள் 145 பேருக்கு உடனடி வேலை உண்டு

- ★ சம்பளம் ரூபா 11,500/-
- ★ இருப்பிட வசதி உண்டு.
- ★ 1 வருட ஒப்பந்தம் - வயதெல்லை 19-40
- ★ சர்வதேச (All Countries) கடவுச் சீட்டு
- ★ 4 பாஸ்போட் அளவு படங்கள்
- ★ 1 கலர் போஸ்ற் காட் அளவு படம் (முழுத் தோற்றம்)

ஆகியவற்றுடன் உடன் வரவும்.

An Najmi Enterprises (Pvt) Ltd ,
135A 1/2 Galle Road,
Dehiwala.

Labour Licence No. 556
Approval No. AL/556/ADVT/1/89
Phone: 722950, 716507
Telex: 22786

இம் மாதம் 28, 29 ஆகிய நாட்களில் எமது நிர்வாக உதவியாளரை நேரில் சந்திக்கவும்.

தி. மோகனதாஸ்
கல்லூரி வீதி,
காங்கேசன்துறை.

[9296]

---

+
J. M. J.

அன்றும்!
இன்றும்!!
என்றும்!!!

உங்கள் பிரயாண ஒழுங்குகளை நம்பிக்கையுடனும் பாதுகாப்புடனும் வகுத்துத் தருவதில் வல்லவர்கள் என்ற பெயர் பெற்ற

## உங்கள் பயண அமைப்பாளர் எஸ். பி. அன்ரன்

வழங்கும் நற்செய்தி!

★ புதுவருடத்தில் ★

- ★ கனடா
- ★ ஜெர்மனி
- ★ பிரான்ஸ்
- ★ இத்தாலி
- ★ அவுஸ்திரேலியா

ஆகிய நாடுகளுக்கு நீங்கள் பத்திரமாகவும் நம்பிக்கையாகவும் பயணம் செய்வதற்கு நிச்சயமான பயண ஒழுங்குகளை அமைத்துத் தருகின்றோம்.

**எஸ். பி. அன்ரன்**
No. 648 1/3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/1362)

---

## எமது புதிய வெளியீடுகள்

(1) அர்ஜுன், கௌதமி, சரத்பாபு
"காக்கிச் சட்டை போட்ட மச்சான்"

(2) மோகன், மாதுரி, S.S
"வசந்தி"
[ORIGINAL]

(3)
**CROSS MISSION**
(WAR FILM)

அடுத்த வெளியீடு:-
சிரஞ்சீவியின்
"இடி முழக்கம்"

**குணம் வீடியோ சென்ரர்**
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(C/1385)

---

## 90ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் கிருஷ்ணன் சதீஸ்வரன்**

மலர்வு: 29 - 01 - 1969
உதிர்வு: 28 - 10 - 1988

அழியாத நினைவினை அளித்து விட்டு சென்ற உன் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தொழிற்சாலை நண்பர்கள்
சுன்னாகம்.

(C/1153)

---

முன்னைநாள் துணைவேந்தர்
பேராசிரியர்

## சு. வித்தியானந்தன்

அவர்களுக்கு எமது

## கண்ணீர் அஞ்சலி



முத்தமிழில் வல்லானை மூதறிஞர் பல்லாரில் எத்திசையும் புகழ் பூத்த நலலானை - வித்தியானந்தனைப் போல அரியதொரு மானிடனை நாமெங்கு காண்போம் இனி.

**MACK TRAVELS (PVT) Ltd.**
8, First Lane,
Pointpedro Rd,
Jaffna.

(C/1152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறந்த தின வாழ்த்து



செல்வி
**◎ ஜெயசிறீ கண்ணப்பர் ◎**
(சுன்னாகம் இராமநாதன் கல்லூரி மாணவி)

கண்ணப்பர் - ஜெயதேவி தம்பதிகளின் புதல்வி ஜெயசிறீ அவர்களின் பிறந்த தினம் [27-01-1989] வெள்ளிக்கிழமை.

வாழ்த்துபவர்கள்:- ஐயா, அம்மா, அண்ணா, தம்பி, பெரியஐயாமார், பெரியம்மாமார், பிள்ளைகள், சித்தப்பாமார், அன்ரிமார், பிள்ளைகள், மாமன்மார், மாமிமார், பிள்ளைகள் அனைவரும் நீடூழி வாழ்க என்று வாழ்த்துகிறார்கள்.

வரிக்காடு,
வல்வை (C/1378)



**89 A/L தமிழ்**
துரித மீட்டல் வகுப்பு
**ஆரம்பம்:- 1, 2. 89 பி. ப. 4 மணி.**
செல்வி சி. மீரா (B. A)
**RADIANT INSTITUTE**
Punkankulam — Ariyalai
(9288)



யா/சங்கானை சிவப்பிரகாச ம. வி.

## தேவை

1. நடன ஆசிரியை
2. கிறிஸ்தவம் ஆசிரியை

05 - 02 - 1989 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு நற்சான்றிதழ்களுடன் நேரில் சமுகமளிக்கவும்.

அதிபர்
[9286]



யாழ் மாவட்ட மினி சினிமா சங்கம்
42/4, பணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்

## மினி சினிமா உரிமையாளர் கவனத்திற்கு!

புதிய தலைவரைத் தெரிவு செய்யும் முகமாக எதிர்வரும் 29 - 01 - 1989 ஞாயிற்றுக்கிழமை காலை 9 30 மணிக்கு மேற்படி சங்க காரியாலயத்தில் கூடவிருக்கும் பொதுக் கூட்டத்திற்கு அனைவரும் தவறாது சமுகம் கொடுக்கவும்.

செயலாளர்
யா. மா. மி. சி. சங்கம்
(9093)



## சிக்மா பம்ப்ஸ்

மண்ணெண்ணெயில் இயங்கும் விலியர்ஸ், குபோடா என்ஜின் பொருத்தப்பட்ட சிக்மா பம்ப்ஸ் இப்பொழுது கையிருப்பில் உண்டு. குறிப்பிட்ட தொகையே வந்திருப்பதனால் உங்கள் தேவைகளை உடனே பூர்த்தி செய்து கொள்ளுங்கள்.

விலியர்ஸ் என்ஜின் பொருத்தியது ரூபா 7500.00
குபோடா என்ஜின் பொருத்தியது ரூபா 9300.00

**யுனைற்றெட் அக்ரோ என்ஜினியரிங்**
274/1, ஆஸ்பத்திரி வீதி,
(பெரியாஸ்பத்திரி முன்பாக)
யாழ்ப்பாணம்.

தொழிற்சாலை:
நாவற்குழி - கைதடி. (C/1369)


யாழ். முதலாம் குறுக்குத் தெருவில்

# மார்பு நோய் சிகிச்சைப் பிரிவு மீண்டும் இயங்குகின்றது

யாழ்ப்பாணம், ஜன. 27

யாழ்ப்பாணம் மார்பு நோய் சிகிச்சைப் பிரிவு மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது.

யாழ். முதலாம் குறுக்குத் தெருவில் யாழ். மத்தியகல்லூரிக்கு அருகாமையில் 125ஆம் இல்லத்தில் இந்தச் சிகிச்சை நிலையம் இயங்குகிறது.

சிறுநீர்ப் பரிசோதனை, சளிப்பரிசோதனை, மார்புப் பரிசோதனை மற்றும் மருத்துவ சோதனைகளும் இங்கு நடைபெறுகின்றன.

எனினும் 'எக்ஸ்ரே' படப்பிடிப்புக்கு மட்டும் நோயாளர்கள் யாழ்ப்பாணம், மயிலிட்டி ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பப்படுகின்றார்கள்.

தினசரி சுமார் முப்பது நோயாளர்கள் இந்த சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

கடந்த சில வாரங்களாக சிகிச்சை நிலையத்தில் மருந்து பற்றாக்குறை இருந்த போதிலும் —

கடந்த வெள்ளிக்கிழமையின் பின்னர் அவை நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாக உதவி வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேற்படி மார்புநோய் சிகிச்சை நிலையம் முன்னர் கச்சேரிக்கு அருகில் இயங்கிவந்தது. கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக இந்த சிகிச்சை நிலையம் இயங்கமுடியாத நிலையில் இருந்தது தெரிந்ததே. (உ-10)

## பணிப்பாளர் உதவி

கிளிநொச்சி மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம் கிளாலி றோமன் கத்தோலிக்க கனிஷ்ட வித்தியாலய கட்டடத்தை வேய்வதற்குரிய தொகையைத் தனது சொந்தப் பணத்தில் இருந்து வழங்கினார். (இ-117)

## பஸ் சேவை

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ளூர் பாடசாலை பஸ்சேவைகளை மீண்டும் ஆரம்பிக்கும்படி கிளிநொச்சி கொத்தணி அதிபர் திரு. என். சோதிநாதன் வடபிராந்திய போக்குவரத்துச் சபை கிளிநொச்சிசாலை அத்தியட்சகரைக் கேட்டுள்ளார். (க- 144)

## வடக்கு, கிழக்கிற்கு 60 பஸ்கள், 15 அம்புலன்ஸ்கள்

கொழும்பு, ஜன. 27

இந்தியா, வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கு 60 பஸ்களையும் 15 அம்புலன்ஸ்களையும் வழங்க இருக்கிறது.

இத்தகவலை வடக்கு-கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாள் வெளியிட்டார்.

அவர்மேலும் சொன்னதாவது:

வேளாண்மைக் கருவிகளையும் இந்தியா அனுப்ப உள்ளது.

பாடசாலை மாணவருக்குத் தேவையான 25 ஆயிரம் தொகுதி சீருடைகள், காலணிகள் ஆகியவற்றையும் இந்தியா இந்த நிதி ஆண்டில் தந்து உதவ முன்வந்துள்ளது.

இந்த நிதியாண்டில் இந்தியா ஒதுக்கியுள்ள 25 கோடி ரூபா நிதி உதவியின் ஒரு பகுதியாக இவை அமைகிறது.

அடுத்த நிதி ஆண்டுக்கு ஒதுக்கப்படவுள்ள நிதியின் தொகை பற்றி பேச்சுக்கள் நடத்தப்பட்டு வருகின்றன என்றார். (உ-எ)


## மாணவ ஒன்றியம் கோரிக்கை

தாளையடி, ஜன 27

பல்வைத்தியம், மிருகவைத்தியம், விவசாயம் ஆகிய துறைகளுக்கும் கிளிநொச்சி கல்விமாவட்டத்திலிருந்து பல்கலைக்கழகத்துக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும்படி கிளிநொச்சி உயர்தர வகுப்பு மாணவ ஒன்றியம் உயர்கல்வி அமைச்சரைக் கேட்டுள்ளது.

கடந்த காலத்தில் கிளிநொச்சி கல்வி மாவட்டத்திலிருந்து இத்துறைகளுக்கு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

கிளிநொச்சி கல்வி மாவட்டத்திலிருந்து ஏனைய துறைகளுக்கும் கூடுதலான மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும்படியும் இந்த ஒன்றியம் கோரியுள்ளது. [க -144]



1987 அக்டோபர் இராணுவ நடவடிக்கையின் போது மரணமடைந்த யாழ். ஆஸ்பத்திரி ஊழியர்களின் குடும்பங்களுக்கு நஷ்ட ஈட்டுக்கான காசோலைகள் வழங்கும் நிகழ்ச்சி அண்மையில் யாழ் ஆஸ்பத்திரி கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

நிகழ்ச்சிக்கு வருகை தந்தோரை முதல் படத்திலும் -

யாழ். ஆஸ்பத்திரியின் முன்னாள் பணிப்பாளரும், வடக்கு கிழக்கு மாகாண சபை சுகாதார அமைச்சின் செயலாளருமான டாக்டர் எஸ். நச்சினார்க்கினியன் அங்கு உரையாற்றுவதை இரண்டாவது படத்திலும் -

மரணமடைந்த ஊழியர் ஒருவரின் வயோதிபத் தாயார் நஷ்ட ஈட்டுக் காசோலையை டாக்டர் நச்சினார்க்கினியனிடம் இருந்து பெறுவதை மூன்றாவது படத்திலும் காணலாம். (ஏ)

# தானும் தன்னுடன் சேர்ந்த பொருளும் கெடாமல் சுவை தரும் தேன் திருவாசகம்

### திருவாசக விழா நிகழ்ச்சியில் பேச்சு

சுன்னாகம், ஜன 27

"தானும் கெடாது தன்னோடு சேர்ந்த பொருளையும் கெடாமல் வைத்திருக்கும் தேனின் சுவையைப் போன்றதே திருவாசகம். பிறவியில் செய்த புண்ணியத்தினால் தான் திருவாசகத்தை அனுபவிக்கமுடியும். இத்தகைய ஓர் அருமையான நூலை நமக்களித்த மணிவாசகர், இறைவனை உள்ளத்தில் வைத்திருந்து, இறைவன் கொடுத்த சோதனைகளில் வெற்றியடைந்து, ஞானமார்க்கத்தினால் இறைவனைய அடைந்தவர்"

ஊரெழு கம்பன் கழகத்தினால் நடத்தப்பட்ட திருவாசக விழாவின் மூன்றாம் நாள் நிகழ்ச்சியின்போது உரையாற்றுகையில் திருமதி வசந்தா வைத்தியநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

வித்துவான் சி. குமாரசாமி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் "என்புருக்கும் வாசகத்தில் எமையுருக்கும் வாசகங்கள் என்ற தலைப்பில் வித்துவான் க. ந. வேலன் தலைமையில் கருத்தரங்கு ஒன்றும் இடம்பெற்றது.

திரு. சோ. பத்மநாதன் திரு. எஸ். சிவலிங்கராஜா, கலாநிதி அ. சண்முகதாஸ், திரு இ. ஜெயராஜ் ஆகியோர் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

மாலை இடம்பெற்ற நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்த தவத்திரு என். எம். சவரிமுத்து அடிகளார் பேசும்போது "தமிழருடைய பண்பாட்டை கலாசாரத்தை உலகுக்கு அறிவிக்கக்கூடியது திருவாசகம் ஒன்றேதான்:

பக்தித்துறையிலே, பக்தி இலக்கியத்தின் மூலமாகத் தலை சிறந்து விளங்கும் திருவாசகம் தமிழருடைய அரும் பெரும் செல்வம்.

தமிழ் மக்கள் கஷ்டமான நிலைமையிலுள்ள இப்போதைய காலகட்டத்தின்போதும், அவர்கள் படிக்கவேண்டிய ஒரு நூல் திருவாசகம் என்றால் அதில் தவறெதுவும் இல்லை" என்று கூறினார்.

இரண்டாவது நாள் காலை நிகழ்ச்சியின்போது 'நான் கலந்து பாடுங்கால்' என்ற தலைப்பில் அமைந்த கவியரங்கம் இடம்பெற்றது. இதற்கு கவிஞர் இ. முருகையன் தலைமை வகித்தார்.

மாலை நிகழ்ச்சியின் போது, 'நாடகத்தால் உன் அடியார் போல் நடித்து' என்ற விடயத்தின் கீழ் 'இவர்கள் சந்தித்தால்' என்ற புதுமையான அம்சமொன்று இடம்பெற்றது.

திருநாவுக்கரசர், பாரதியார், அருணகிரிநாதர், திருவள்ளுவர், கம்பன் ஆகியோர் மாணிக்கவாசகரைச் சந்திக்கும் புலவர்களாகத் தோன்றினார்கள்.

மாணிக்கவாசகராக கலாநிதி நா. சுப்பிரமணியஐயர் தோன்றி நடித்தார்.

இம்மூன்று நாள் நிகழ்ச்சியின்போது கலாநிதி இ. பாலசுந்தரம், திரு தி. திருநந்தகுமார், திரு. க. நாகேஸ்வரன், திரு. மா. வேதநாதன், திரு. ஏ ரி. பொன்னுத்துரை, செந்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, கவிஞர் முருகு வே. பரமநாதன் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தனர். (ஒ-ச 27)

## திருவிளக்குப் பூசை

வட்டக்கச்சி ஜன 27

வட்டக்கச்சி ஸ்ரீ ரெங்கநாதப் பெருமாள் கோவிலில் தைமாதப் பௌர்ணமியன்று திருவிளக்குப் பூசை நடைபெற்றது. (இ-163)

## அனுமதி

பாஷையூர் புனித அந்தோனியார் மகளிர் வித்தியாலயத்தில் ஜீ சி. ஈ உயர்தர வகுப்புகளை நடத்த கல்வித் திணைக்களத்தினால் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே தமிழ், பொருளியல், வர்த்தகம், இந்து நாகரிகம், மனையியல், சமயம் (றோ.க) அளவையியல் ஆகிய பாடவகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (க)

கிளிநொச்சியில்

# பல நெருக்கடிகளுக்கு மத்தியில் கல்வி முன்னேற்றம்

### கல்விப் பணிப்பாளர் கூறுகிறார்

தாளையடி, ஜன. 27

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த மூன்று வருடங்களில் இயற்கையாகவும், செயற்கையாகவும் பல அசௌகரியங்கள் ஏற்பட்ட போதிலும், கல்விப் பணி குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

வவுனியா, கிளிநொச்சி பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இரா சுந்தரலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

கிளிநொச்சி பிராந்திய கல்விப் பணிமனையை கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட புதிய கட்டடமொன்றில் திறந்து வைத்து அவர் உரையாற்றினார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் இப் புதிய கட்டடமும், வகுப்பறைகளும் அமைக்கப்பட்டன.

புதிய வகுப்பறைக் கட்டடங்களை கிளிநொச்சி கொத்தணி அதிபர் திரு என். சோதிநாதன் திறந்து வைத்தார்.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு க. தேவசிகாமணி மேலதிக அரசாங்க அதிபர் (நிர்வாகம்), திரு எஸ். அமிர்தலிங்கம், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) திரு கே. குணராசா, உதவி அரசாங்க அதிபர் திரு வீரபத்திரபிள்ளை ஆகியோர் வைபவத்தில் உரையாற்றினார்கள். (க- 144)

## புதிய கோவில்

வட்டக்கச்சி, ஜன 27

வட்டக்கச்சியில் உள்ள மாயவனூரில் செங்காட்டான்குள கணபதீஸ்வரம் என்னும் ஓர் புதிய கோவில் அமைக்கப்பட்டுள்ளது. (இ 163)


**A/L விஞ்ஞான மாணவர்களுக்கு**
**90 அசேதன இரசாயனம்**
Sat & Sun — 5. 00 p. m — 6. 00 p. m
ஆரம்பம்- 28 01- 1989
ஆசிரியர்: Mr. நாகரட்னம் B.sc
[illegible] கந்தர்மடம். [1354]



UNIVERSITY OF JAFFNA

**Tender Notice**

Tenders are invited from qualified contractors registered with University of Jaffna for Civil Engineering works for the extension of cooking area at the Main Canteen, Thirunelvely.

Tender forms can be obtained from Works Engineer, University of Jaffna from 01 02-1989 to 03-02-1989 between 9-00 a m. to 3-00 p. m. on producing a receipt from Bursar, University of Jaffna for the non-refundable tender fee of Rs. 100/-

The perfected tenders should be sent to reach the Works Engineer, University of Jaffna on or before 09-02-1989 at 10-00 a m.

Tender Board of University of Jaffna reserves the right to reject any tender.

Actg. Registrar
University of Jaffna,
Thirunelvely, Jaffna.
[C/1147]



## புதிய தொழில் பயிற்சிநெறிகள்

வார இறுதி வகுப்புக்களும்,
வார நாள் வகுப்புக்களும்

Radio T V & Deck
Aircondition & Refrigeration
Motor Winding
&
Electrical Wiring

**ஆரம்பம்: 1 - 2 - 89**

விசேட செய்முறைப் பயிற்சிகளும் வழங்கப்படும்.

உங்கள் பதிவுக்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14, செபஸ்ரியார்ஸ் லேன்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(C/1367)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ். மக்களுக்கு செய்த சேவைகுறித்து மன்சூர்

சல்முனை ஜன 27

யாழ். மக்கள் எள்ளில் அளவில்லா அன்பு கொண்டிருக்கின்றனர். நான் அவர்களுக்குஎன்னாலான சேவைகளை நிறைவச் செய்துள்ளேன்.

கல்முனை எம். பி யும் முல்லைமாவட்ட அமைச்சருமான ஜனாப் ஏ. ஆர். மன்சூர் மேற்கண்டவாறு கூறினார்.

கல்முனையில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக கடந்த 5 வருடங்கள் கடமையாற்றி யாழ் மாவட்டத்துக்கு மாற்றலாகிச் செல்லும் திரு. ஏ. நித்தியராஜாவுக்கு கல்முனை ப. நோ. கூ. சங்கத்தால் நடத்தப்பட்ட பிரிவுபசார வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு ஜனாப் மன்சூர் உரையாற்றினார்.

அவர் மேலும் பேசுகையில்:

யாழ்ப்பாணத்து மக்கள் நல்ல அறிவு படைத்தவர்கள் அவர்கள் பழகுவதற்கு மிக நல்லவர்கள். அவர்களில் ஒருவரான திரு. நித்தியராஜ் கல்முனையிலும் சாதி, மதபேதம் பாராது சேவையாற்றியுள்ளார். அவரை கல்முனை மக்கள் சார்பில் நான் பாராட்டக்கடமைப்பட்டுள்ளேன். கல்முனை ப.நோ.கூ. சங்கத்தலைவர் ஜனாப். எம்.எம். இஸ்மாயில் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் கல்முனை உதவி அரச அதிபர் ஜனாப். எம்.எச். முயினுடீன், கூட்டுறவுச்சங்க நெறியாளர்களில் ஒருவரான திரு. கே. குணரத்தினம் ஆகியோரும் பேசினர். [இ-84]

## தைப்பூச விழா

முல்லைத்தீவு, ஜன 27

தைப்பூச விழா முல்லைத்தீவு ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. (இ-92)

## கோரிக்கை

நாரந்தனை செருக்கன் சந்தியில் அமைந்துள்ள மரக்கறி, மீன் சந்தையை உடனடியாக பிரதேச சபை பொறுப்பேற்று நடத்த வேண்டும் என்று இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பிரஸ்தாப சந்தை தனியார் காணி ஒன்றில் அமைக்கப்பட்டு நடத்தப்படுவதாகவும் இதனால் வசதிகள் ஏதுமற்ற சாதாரண ஓலைக் கொட்டில் ஒன்றிலேயே சந்தை அமைந்துள்ளதாகவும் பொதுமக்களும், சந்தை வியாபாரிகளும் சிரமங்களுக்குள்ளாவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இக்குறைகளை நீக்கு முகமாகவும் பிரதேச சபைக்கு வருமானம் ஒன்றைப் பெற்றுத்தரு முகமாகவும் உடனடியாக மேற்படி காணியையும் சந்தையையும் ஊர்காவற்றுறை பிரதேச சபை பொறுப்பேற்று நடத்த வேண்டுமென இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். [க-166]

## வெள்ளிவிழா

யாழ்ப்பாணம் ஜன 27

மானிப்பாய் மகளிர் கல்லூரியின் வெள்ளி விழா இன்றும் நாளையும் 30, 31 ஆகிய திகதிகளிலும் பெப்ரவரி மாதம் 1 ஆம் திகதியிலும் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திருமதி எஸ் கல்யாணசுந்தரேசன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவை வடமாகாண கல்விப் பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம் ஆரம்பித்துவைப்பார்.

இன்று நடைபெறவுள்ள சமயாசார நிகழ்ச்சிக்கு சமயக் கல்விக்குப் பொறுப்பான கல்வி அதிகாரி திரு எஸ் மகேசன் தலைமை வகிக்கிறார்.

சனிக்கிழமை 28 ஆம் திகதி நடைபெறவிருக்கும் நிகழ்ச்சிக்கு யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ஏ. துரைராஜா தலைமை வகிப்பார்.

வெள்ளிவிழாவின் இறுதி நாளான முதலாம் திகதி பரிசளிப்பு விழா நடைபெறும். பிரதம விருந்தினராக கல்விப் பணிப்பாளர் திரு. வெ. சபாநாயகம்கலந்து கொள்வார். பரிசில்களை திருமதி சபாநாயகம் வழங்குவார்.

வெள்ளிவிழாவை ஒட்டி நடைபெறும் பொருட்காட்சி 27, 28, 30, 31 ஆம் திகதிகளிலும் பெப்ரவரி முதலாம் திகதியும் நடைபெறும். (ச)

# புற்று நோயாளர் விடுதி: இன்று திறப்புவிழா

யாழ்ப்பாணம், ஜன.27

வடமாகாண புற்று நோயாளர்கள் சங்கத்தால் வறுத்தலைவிளானில் கட்டப்பட்ட புற்று நோயாளர் விடுதி இன்று வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்படுகிறது.

இன்று காலை 9 மணிக்கு இந்த விடுதி திறந்து வைக்கப்படும்.

சகலரையும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுமாறு வடமாகாண புற்று நோயாளர் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது. (இ- 10)

# உதைபந்தாட்ட நடுவர் பரீட்சை பெப். 25 இல்

யாழ்ப்பாணம், ஜன. 27

உதைபந்தாட்ட நடுவர்களுக்கான போட்டிப் பரீட்சை பெப்ரவரி 25 ஆம் திகதி கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நடைபெறும்.

இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பவர்கள் தத்தம் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கங்கள் ஊடாக இருபத்தைந்து ரூபாவுக்கான காசோலையுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் இந்தப் பரீட்சை தமிழிலும் நடைபெறுமென இலங்கை உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்க உபதலைவர் திரு ஏ. எஸ். குணரத்தினம் தெரிவித்தார்.

எதிர் வரும் 15 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டும். (இ-ஐ)

## புதிய நியமனம்

ஊர்காவற்றுறை, ஜன 27

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் புதிய அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தராக திரு. ஏ. சி. இராசதுரை நியமிக்கப்பட்டார். (க 16)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம் ஜன 27

மறுமலர்ச்சி மன்ற வெள்ளி விழா நிகழ்ச்சிகள் நாளை 28 ஆம் திகதி நடைபெறமாட்டா என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்றையதினம் பேராசிரியர் சு. வித்தியானந்தனின் இறுதிச்சடங்குகள் நடைபெறுவதனாலேயே நிகழ்ச்சிகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ 5)

## கல்முனையில் நிவாரணம்

கல்முனை, ஜன 27

கல்முனையில் கடந்தகால கலவரங்களால் பாதிக்கப்பட்ட கடற்தொழிலாளர்களுக்கு அரசாங்க அதிபர் மூலமாக நிவாரணம் வழங்கப்படவிருக்கின்றது.

இதற்கான விண்ணப்பங்கள் கல்முனை உதவி அரச அதிபர் பிரிவால் ஏற்கப்பட்டு வருகின்றன. (இ-84]

# பல்கலைக்கழக வளர்ச்சிக்கு அரும் பணி ஆற்றியவர்

## அஞ்சலிக் கூட்டத்தில் உரை

யாழ்ப்பாணம், ஜன. 27

இலங்கை பல்கலைக் கழகங்களில் நாற்பது வருடங்களுக்கு மேல் சேவையாற்றி குறிப்பாக எமது யாழ் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தராக இருந்து அதன் வளர்ச்சிக்கு அரும்பங்காற்றிய பேராசிரியர் வித்தியானந்தனின் மறைவு ஈடுசெய்ய முடியாததாகும்

யாழ் பல்கலைக் கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் என் பாலகிருஷ்ணன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் யாழ் பல்கலைக் கழக முன்னைநாள் துணைவேந்தர் பேராசிரியர் வித்தியானந்தனுக்கு அஞ்சலிக் கூட்டமொன்று நடைபெற்றது.

யாழ் பல்கலைக் கழக மாணவர் மன்றத் தலைவர் எம். ரஞ்சித் தலைமையில் கூட்டம் நடைபெற்றது

பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் மேலும் பேசுகையில் பேராசிரியர் வித்தியானந்தன் பல்கலைக் கழகத்தின் வளர்ச்சியுடன் தமிழ் கலாசாரம், தமிழ் நாடகத்துறை என்பவற்றின் வளர்ச்சிக்கும் தம்மால் இயன்ற பங்களிப்பை வழங்கினார் என்றார்.

பேராசிரியர் கணேசலிங்கம் உரை நிகழ்த்துகையில் யாழ் பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடம் அமைவதற்கு பேராசிரியர் வித்தியானந்தன் ஆற்றிய பங்களிப்பு சிறப்பானது என்பதுடன் அமையவுள்ள விவசாய பீடம் தொடர்பான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளையும் எடுத்தவர் இவரே என்றார்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ், பேராசிரியர் வேலுப்பிள்ளை, யாழ் பல்கலைக் கழக சிரேஷ்ட மேலதிக பதிவாளர் முருகையன் ஆகியோருடன் மாணவப் பிரதிநிதிகளும் ஊழியர் பிரதிநிதிகளும் உரை நிகழ்த்தினர். (இ-5)

## யாழ். முஸ்லிம் கலா சார பாதுகாப்புச்சபை

யாழ்ப்பாணம், ஜன 27

முஸ்லிம் பகுதியில் உள்ள இளைஞர்கள் போதைவஸ்துப் பாவிப்பதையும்–

அதனால் ஏற்படும் களவு, கொள்ளை, சமூக விரோதச் செயல்களையும்- தடுக்க யாழ். முஸ்லிம் கலா சார பாதுகாப்புச் சபை நடவடிக்கை எடுத்து வருகின்றது:

முஸ்லிம் வட்டாரத்தில் உள்ள சகல பள்ளி வாசல் பரிபாலனர்களும் இந்தச் சபையில் இணைந்து செயற்பட்டு வருகிறார்கள்.

இந்தச் சபை வெளியிட்டுள்ள பத்திரிகை அறிக்கையில் இது பற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## விளையாட்டு அதிகாரிகள் பதவி:

# தோற்ற முடியாதோருக்கு 31 இல் நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜன, 27

கடந்த 16 ஆம் திகதியும் 20 ஆம் திகதியும் நடைபெற்றவிளையாட்டு அதிகாரிகள் பதவிக்கான நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றமுடியாதவர்கள் எதிர்வரும் 31 ஆம் திகதி நடைபெறவிருக்கும் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

விளையாட்டுத் துறை அமைச்சில் காலை 9-00 மணிக்கு பிரஸ்தாப விண்ணப்பதாரர்களுக்கான நேர்முகப்பரீட்சை மேற்படிதினத்தில் நடைபெறும் என்று வவுனியா, கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத் துறை அதிகாரி திரு ஏ. எஸ். குணரத்தினம் தெரிவித்தார்.

விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்குப் போகும் போது தகைமைகளுக்கான சான்றிதழ்களின் மூலப் பிரதிகளை எடுத்துச் செல்லும்படி கேட்கப்படுகின்றனர். (இ-ஐ)

## மீண்டும் ஆரம்பிக்குக!

பண்டத்தரிப்பு, ஜன. 27

யாழ் மாவட்டத்தில் மீண்டும் வேலைவங்கிப் பதிவை ஆரம்பிக்குமாறு படித்து வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகளும் பெற்றோரும் கோருகின்றனர்.

1985 ஆம் ஆண்டுடன் வேலை வங்கிப் பதிவு நின்றுவிட்டதால், புதியவர்கள் பதிய முடியாமல் இருப்பதோடு பதிந்தவர்களும் தமது மேலதிக தகைமைகளை பதிய முடியாமற் திண்டாடுகின்றனர் என்று கூறப்படுகின்றது (க- 120)

# பனைவள ஆய்வுகூட கட்டடநிலை பூர்த்தியாகாமல் இருப்பது ஏன்?

## சபைச் செயலாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம் ஜன. 27

உதயன் 3 1 1989 இதழில் 4ம் பக்கத்தில் வெளியான 'பூர்த்தி செய்யப்படாத நிலையில் பனைவள ஆய்வு கூடக் கட்டடம்'' என்றசெய்திசம்பந்தமாக பனை அபிவிருத்திச் சபையின் செயலாளர் திரு. என் கிருஷ்ணமூர்த்தி விளக்கம் அளித்துள்ளார்.

13 - 1 - 89 திகதியிட்டு எழுதிய அவரது கடித விபரம் வருமாறு;-

பனை வள அபிவிருத்தி சபையின் கைத்தடி ஆராய்ச்சி நிலையம்1986ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, 1987ம் ஆண்டு ஒக்டோபர் மாதமளவில் எண்பது சதவிகமான வேலைகள் பூர்த்தியடைந்தநிலையில் இருந்தது ஆனால், 10 10-87 தொடக்கம் நடைபெற்ற கலவரத்தின் காரணமாகக் குறித்த கட்டட வேலை முற்றுப்பெறுவதற்குத் தாமதங்கள் ஏற்பட்டன. எனினும். எமது சபைப்பிரதிநிதிகள். சம்பந்தப்பட்ட கட்டடக் கலைஞர், மற்றும்கட்டட ஒப்பந்தகாரர்ஆகியோர் சேர்ந்து கொழும்பில் நடத்திய கூட்டத்தில் இக்கட்டடம் 1988ம் ஆண்டு யூலை மாதத்துக்கு முன்பு பூர்த்தி செய்யப்பட்டு எமக்குக்கையளிக்க வேண்டுமென்றுதீர்மானிக்கப்பட்டது.

இக்கட்டடத்தை மீண்டும் ஆரம்பித்துக் கட்டுவதற்கு, நிலுவையாக விருந்தஏறக்குறையரூபா 33,000/- ஐ குறித்த ஒப்பந்தகாரர் எம்மிடம் கோரியிருந்தனர்: இப்பணம் எம்மால் உடனடியாக ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டது: எனினும், இவர்களால் இவ்வேலை குறித்தபடி ஆரம்பிக்கப்படவில்லை.

குறித்த கட்டட மதிப்பீடு 23,28 815 ரூபா25 சதம் ஆகும். இம்மதிப்பீட்டின்படிகட்டடக்கலைஞரினால் சிபார்சு செய்யப்பட்ட முழுத்தொகையும் அதாவது 19,54,111 ரூபா 21 சதம் எம்மால் ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டது. கொடுப்பனவுவழங்குவதில் எமது சபையினால் எதுவித காலதாமதமும் ஏற்படவில்லை என்பது ஒப்பந்தக்காரருக்கு நன்கு தெரியும்.

கட்டடம் கட்டிய வகையால், அவர்கள் அக்கட்டடத்தில் மேற்கொண்ட வேலைகளிலும் பார்க்க எம்மால் கூடுதலான பணமே வழங்கப்பட்டுள்ளதேயன்றி அவர்களுக்கு எதுவித சென்மதியும் இருக்கவில்லை என்பதை இத்தருணத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

கொழும்பில் நடைபெற்றகூட்டத்தில் கேட்[illegible] ரம் இவர்கள் 1988 யூலை [illegible] டத்தைக் கட்டி எமக்குக் கையளிக்க வேண்டியிருந்தபோதிலும், அவர்களுக்கு மேலும் ஒருமாத கால அவகாசம் வழங்கப்பட்டது.

எனினும் அவர்கள் குறித்த வேலையை ஆரம்பிக்காத காரணத்தினால், அவ் ஒப்பந்தம் எம்மால் ரத்துச் செய்யப்பட்டு 01.10 88 தொடக்கம் இக்கட்டடம் எம்மால் பொறுப்பேற்கப்பட்டது. ஆகவே, சம்பந்தப்பட்ட கட்டடத்தை அமைப்பதற்கென ஒப்பந்தம் செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களுக்குமிகுதிவேலைக்கான நிதி ஒதுக்கப்படாத காரணத்தால் இந்தக் கட்டடத்தைப் பூர்த்தி செய்ய முடியாமல் இருக்கின்றதென்ற தகவலில் எவ்வித உண்மையுமில்லை என்பதைத் தெளிவுபடுத்துகின்றோம்.

இக்கட்டடத்தின் உடனடிப் பாதுகாப்புக் கருதி தேவையான கதவுகள் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதோடு, அங்கு கடமையாற்றுவதற்கு மூன்று தொழிலாளர்களும் எம்மால் அமர்த்தப்பட்டனர். இம்மூவரும் இக்கட்டடத்தில் இரவு பகலாகக் கடமையாற்றி வருகின்றார்கள். எனவே 'இயற்கைச் சீரழிவும், விசமிகள் அழிவும் இக்கட்டடத்துக்கு ஏற்படுகின்றது' என்று தங்கள்பத்திரிகையில் வெளிவந்த கூற்று ஏற்கக்கூடியதல்ல என்பதையும் அறியத் தருகின்றோம்.

பனைவள ஆராய்ச்சிக்கு யூ.என்.டி.பி ஸ்தாபனம் நிதியுதவி அளிக்க முன்வந்ததோடு, இப்பணிக்காகப் பல இலட்ச ரூபா அவர்களால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாராய்ச்சி நிலையம் இயங்குவதற்கு முன்னோடியாகச் சேர்ந்த அபிவி[illegible] உற்பத்தி உத்தியோகத்[illegible] உத்தியோகத்தர் ஆகியோர் யூ. என். டீ. பீ. புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் வெளிநாட்டில் பயிற்சி பெற்றுத் திரும்பியுள்ளார்கள் என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். இவ்வாய்வு கூடத்தில் ஆராய்ச்சிப் பணி கூடிய விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. இதற்கான சகல ஏற்பாடுகளும் சபைத் தலைவர் அவர்களால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது இவ்வாறு அந்த அறிக்கையில கூறப்பட்டுள்ளது.

**ஆசிரியர் குறிப்பு:**

பெருந்தொகைப் பணச் செலவில் நிர்மாணிக்கப்பட்ட பனைவள ஆய்வு கூடக் கட்டட வேலைகள் முற்றும் பெறவில்லை அதனால் உரிய தேவைக்குப் பயனிக்கப்படாமல் கிடக்கிறது.

இதனைச் சுட்டிக்காட்டும் பிரதான நோக்கத்துடனேயே செய்தி வெளியிடப்பட்டது இறுதி வேலைகள் பூர்த்தியாகவில்லை என்பதை பனை அபிவிருத்திச்சபையின் செயலாளரும் ஒப்புக் கொள்கிறார்.

கட்டட ஒப்பந்தம், நிதி சம்பந்தப்பட்ட அவரது தகவல்களை இங்கு வெளியிட்டுள்ளோம்.

18.1.89 இல் எமது செய்தியாளரும், படப்பிடிப்பாளரும் ஆய்வு கூடத்துக்கு விஜயம் செய்த போதும் அங்கு போவதற்கு ஓர் ஒற்றையடிப் பாதையே இருந்தது. மூன்று ஊழியர்களும் இருந்தனர். பத்திரிகைகள் குறைகளைச் சுட்டிக்காட்டுவது நன்நோக்கத்துடன், மக்கள் நலன் நாடித்தான். அந்த வகையில் உதயன் செய்திக்கு மேலதிக விவரம் வெளியிட்ட சபைச் செயலாளருக்கு வாசகர் சார்பில் நன்றி கூறுகிறோம்.

வெளிநிலைப் பல்கலைக்கழகக் கல்வி

156/3, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்

**G.A.Q., B.A.**

வகுப்புகள்

| | |
|---|---|
| பொருளியல்: | வரதராஜன் |
| தமிழ்: | குழந்தைவேல் |
| இந்துநாகரீகம்: | காரை சுந்தரம்பிள்ளை |
| மெய்யியல்: | சந்திரராஜா |
| அரசறிவியல்: | தமிம் |

வெளிநிலைப் பல்கலைக்கழகக் கல்வியில் தனித்துவம் வாய்ந்த இவ் விரிவுரையாளர் குழு யாழ்நகரில் எமது நிறுவனத்தில் மட்டுமே கற்பிப்பர்.

ஆரம்பம்: 4-2-89 சனி

2-00 p. m.

பல்கலைக்கழகப் பதிவுகள் அனைத்தும் எம்மால் செய்து தரப்படும்.

விபரங்கட்கு:

**BECON**

156/3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (9283)

★ BECON ★

156/3 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**A/L 89** மீட்டல், வினா - விடை வகுப்புகள்

பொருளியல்
வரதராஜன்

DAY CLASS

பிரிவு I திங்கள், புதன், வெள்ளி 11.00 — 12 00
பிரிவு II செவ்; புதன்; வெள்ளி 10.00 — 11 00

SAT; SUN CLASS

பிரிவு I 8 00 — 9.00
பிரிவு II 1.00 — 2.00

வர்த்தகம்
ரட்னம்

DAY CLASS

பிரிவு I திங்; செவ்; வியா; வெள் 10 00 — 11.00
பிரிவு II திங்கள்; புதன்; வெள்ளி 12.00 — 1.00

SAT; SUN CLASS

பிரிவு I 7 00 — 8.00
பிரிவு II 2 00 — 3 00

(C/1573)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வி லூயிஸ் ஈவா மரியா

மலர்வு 08 09-1972 — உதிர்வு: 27-12-1988

ஆ மதுரமான நேச யேசுவே! நித்திய ஒளியின் தூய்மையே! மெய்யான ஆறுதல் தரும் கர்த்தாவே! இவ்வுலகின் இன்பங்களைச் சுகிர்க்க வேண்டிய பருவத்தில் அதைத் துறந்து உமது சந்நிதி நாடிவந்திருக்கும் எமது அன்பு

ஈவா மரியாவுடைய

ஆத்துமத்தை ஏற்றுக்கொள்ளும். இவளின் பலவீனங்களை நீர் மறந்து உமது பேரின்ப ஒளியை இவளுக்கு அளித்தருளும்படி தயவாக மன்றாடுகின்றோம். ஆமென்.

இவரின் பிரிவால் துயருறும்:

பாப்பா, அம்மா, சகோதரர்கள், பேரன், மைத்துனர்மார், உற்றார், உறவினர், நண்பர்கள்.

18/6, மத்திய கிழக்கு வீதி, குருநகர்.

(9102)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர் வித்தியின் பரம்பரை

பரம்பரை என்ற சொல்லிற்கு இரண்டு விளக்கம் தரலாம். ஒன்று பிறந்து வளர்ந்த பரம்பரை மற்றது மக்களை உருவாக்கின்ற கல்விப்பரம்பரை.

மனிதனைப் பரம்பரை உருவாக்குகின்றது. இது ஒரு சாராரின் கருத்து.

மனிதனைச் சூழ்நிலை உருவாக்குகின்றது இது மற்றொரு சாராரின் கருத்து.

மூன்றாவது சாராரின் கருத்துப்படி. வேண்டிய போதெல்லாம், தனக்கு வேண்டியவரைக் கடவுள் உருவாக்குகின்றார்.

> பேராசிரியர் வித்தியானந்தனின் முதல் மாணவர்களுள் அமரர் த. சண்முகசுந்தரம் (தசம்) அவர்களும் ஒருவர். பேராசிரியரிடம் கல்வி பயின்ற பின் பத்திரிகையாளராக தமது வாழ்க்கையைத் தொடங்கிய அவர் பின் கல்விச்சேவையில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். மகாஜனக் கல்லூரி ஆசிரியராகவிருந்த போது திரு சண்முகசுந்தரம், பேராசிரியர் பற்றி எழுதிய கட்டுரையின் சில பகுதிகள் இங்கு பிரசுரமாகின்றது
>
> பேராசிரியரின் மணிவிழாவை ஒட்டி கலை இலக்கிய பத்திரிகை நண்பர்கள் அமைப்பு வெளியிட்ட மலரில் இக்கட்டுரை இடம் பெற்றது.

இந்த மூன்று சாராரின் கருத்தும் பேராசிரியர் வித்தியானந்தனைப் பொறுத்தவரையில் பொருந்தும்.

பேராசிரியர் வித்தியானந்தன் நல்ல பரம்பரையில் பிறந்தவர். நல்லசூழ்நிலையின் வளர்ந்தவர். இவரின் குடும்பம் முழுவதுமே மாவிட்டபுரம் முருகனின் தொண்டர். தமிழ்க் கல்வியை வளர்த்தவர். பேராசிரியர் வித்தியானந்தன் நல்ல கல்விப் பரம்பரையில் கற்றவர். ஈழத்துத் தமிழியல் பரம்பரை ஒன்றைச் சிறப்பாகவும், தமிழ்கூறும் நல்லுலகத்துப் பரம்பரை ஒன்றைப் பொதுவாகவும் பேணி வளர்த்தவர்.

தமிழியல் தென்றலாம் பேராசிரியர் வித்தியானந்தன் எழுதிய முதலாவது நூலின் பெயர் 'இலக்கியத் தென்றல்'. இந்த நூல் 1953இல் வெளிவந்தது. இந்த இலக்கியத் தென்றல் இன்று வரையும் மெல்லென வீசிக்கொண்டே இருக்கின்றது.

தமிழியல் தென்றல் வித்தியானந்தன் ஒரு போதும் புயலாக மாறியதில்லை; புயலுக்குரிய சீற்றம் அவரிடமில்லை. அன்பு, அடக்கம், பண்பு நிரம்பியவர், கடவுள் மீது செலுத்தும் அன்பு ஒருபுறம்; தன் மாணவர் மீது செலுத்தும் அன்பு மற்றொருபுறம். இவற்றையெல்லாம் நன்கு விளங்கவேண்டுமானால் பேராசிரியர் வித்தியானந்தனின் குடும்ப பரம்பரையையும், அவரின் கல்விப் பரம்பரையையும், அவர் உருவாக்கிய மாணவர் பரம்பரையையும் நோக்குதல் பொருத்தமானசெயல்.

வீமன்காமம் மகாவித்தியாலயத்திலே ஆண்டுதோறும் சோறுவழங்கல் நடைபெறும்: மாவை முருகன் அடியாருக்குச் சோறு வழங்கும் பணியைப் பேராசிரியர் வித்தியானந்தன் தானே நின்று நடாத்தி வைப்பார். இது இவரின் பரம்பரைத் தொண்டு. இந்தப் பரம்பரை இறை அன்பை வளர்த்த பரம்பரை, கல்வியை - சிறப்பாகத் தமிழ்க் கல்வியை வளர்த்த பரம்பரை; முருகனுக்குத் தொண்டு செய்யும் பரம்பரை.

வீமன்காமம் மகாவித்தியாலயத்தைக்

## அமரர் த. சண்முகசுந்தரம்

கட்டி எழுப்பியவர் சின்னத்தம்பி உடையார். பேராசிரியரின் தகப்பன் வழிப் பேரனார். வீமன்காமம் மகாவித்தியாலயத்தின் முகாமையாளராக இருந்தவர் பேராசிரியர். நடேசுவராக் கல்லூரியைக் கட்டி எழுப்பியவர் குருநாத உடையார். இவரும் பேராசிரியரின் பரம்பரையைச் சேர்ந்தவர்.

வித்தியானந்தன் சைவச்சூழலில் கல்வி கற்கவேண்டும் என்றபடியால் வீமன்காமம் மகாவித்தியாலயத்தில் ஏடு தொடக்கப்பட்டது. பின்னர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும், யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியிலும்,



வித்தியானந்தன்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் இளம் வித்தியானந்தன் கல்வி கற்றார்.

பின்னர் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பையும், இலண்டன் பல்கலைக் கழகத்தில் கலாநிதி ஆராய்ச்சிப் பணியையும்மேற்கொண்டார்.

பேராசிரியரின் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் அவர்பெற்ற பட்டப்படிப்பைப் பற்றிக் கவனித்தல் மிகவும் முக்கியம். இங்கு மூவரின் தமிழ்க்கல்வித் தாக்கம் இளம் வித்தியானந்தனைக் கவர்ந்தது. இந்த மூவரின் தமிழ்ப் புலமை வித்தியானந்தனின்எதிர் காலத்தைச் சிராக்கியது. இவர்கள் மூவரும் பேராசிரியர்கள். அவர்களின் தமிழ்ப் பற்று, புலமை, ஆராய்ச்சித் திறன் என்பவை இளம் வித்தியைக் கவர்ந்தன. பேராசிரியர்விபுலானந்த அடிகளார், பேராசிரியர் கணபதிப்பிள்ளை, பேராசிரியர் செல்வநாயகம் ஆகியோர் இந்த மூவர்.

இலண்டன் பல்கலைக் கழகத்தில் இவருக்கு வழிகாட்டியாக அமைந்தவர் பேராசிரியர் அல்பிரட் மாஸ்றர், பேராசிரியர் பிலிப்சு, பேராசிரியர் பரோ. இதில் கலையருவி கணபதிப்பிள்ளையின் தாக்கமே பேராசிரியர் வித்தியின் வாழ்வில் பெரிய பங்கைப் பெறுகின்றது.

முன்னர் தமிழியல் ஆராய்ச்சியை இலங்கை மாணவர் ஐரோப்பியப் பல்கலைக் கழகத்தில் மேற்கொண்டனர். இவர்களுக்குப் பெரிதும் உதவியவர்கள் பேராசிரியர் கணபதிப்பிள்ளையும் பேராசிரியர் வித்தியானந்தனும், இந்தப் போக்கை மாற்றியமைத்து இலங்கையிலும் தமிழியல் ஆராய்ச்சியை மேற்கொள்ள வைத்த பெருமையிலும் பெரும்பகுதி பேராசிரியர் வித்தியானந்தனைச் சாரும்.

இன்று இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களிலும் ஏனைய உலகப் பல்கலைக்கழகங்களிலும் பணிபுரியும் பலரும் பேராசிரியர் வித்தியானந்தனின் மாணவர். இது பெருமைக்குரிய அலுவல்.

பேராசிரியர் வித்தியானந்தன் பரந்த உளப்போக்கு உடையவர். இலங்கை இஸ்லாமியர் பற்றிய அகன்ற ஆழமான ஆராய்ச்சிப் பரம்பரையைப் பெரிதும் உருவாக்கியவர் பேராசிரியர். இஸ்லாமிய இயல் ஆராய்ச்சியாளர் இவர். இவர் எழுதிய 'கலையும் பண்பும்' என்ற நூலுக்குச் சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தது என்பது குறிப்பிடப்பட வேண்டிய அலுவல். அது மட்டன்று ஈழத்துத் தமிழியல் வளர்ச்சிக்குக் குறிப்பாகவும், தமிழியல்வளர்ச்சிக்குப் பொதுவாகவும் கிறித்தவர் ஆற்றிய தொண்டினைத் தானும் ஆராய்ந்தார். அத்துடன் பிறரையும் ஆராயும்படி தூண்டினார்.

இங்ஙனம் இஸ்லாமியத் தமிழியல், கிறித்தவத் தமிழியல் தமிழ் சிங்களக் கலைத்தொடரியல் பற்றித்தானும் ஆராய்ந்தார் பிறரையும் ஆராயும்படி செய்தார். இவை பேராசிரியர் தோற்றுவித்த கல்விப்பரம்பரையின் அணிகலன்.

பேராசிரியர் வித்தியானந்தன் அழியவிடாது காப்பாற்றிய கலைப் பரம்பரை ஒன்று இன்று இளமையுடன் பொலிவுற்று மறுமலர்ச்சி பெற்றுள்ளது. அதுதான் தமிழ் நாடக அண்ணாவியார் பரம்பரை, ஈழத்து அண்ணாவியார் பரம்பரை தன்பெருமையை உணரவிடாது தடுத்து வைத்தனர். ஒரு சாரார் ஐரோப்பியக் கலை மோகம் தலைதூக்கி ஆடிய காலம் அது அந்தக் காலத்தில் கூத்துக் கலையைக் காப்பாற்றி அதற்குப் புத்துயிர் அளித்தவர் வித்தியானந்தன்.

பேராசிரியர் வித்தியானந்தன் போற்றி வளர்த்த ஆராய்ச்சிப் பரம்பரை மற்றொன்றையும் இங்கே குறிப்பிடே ஆகவேண்டும் அதுதான் அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம். இந்த நிறுவனத்தை மலேசியாவில் தோற்றுவித்த பெருமை தமிழ் முனிவர் தனிநாயக அடிகளாரைச் சாரும் இந்த நிறுவனம் வேரூன்றி வளரப் பெரிதும் உதவியவர் பேராசிரியர் வித்தியானந்தன்; இலங்கையில் யாழ்ப்பாணத்தில் இந்த நிறுவனத்தின் ஆய்வரங்கு மாநாடு நடைபெறத் தனிநாயக அடிகளாருடன் நின்று அரும்பாடுபட்டவர் பேராசிரியர் வித்தியானந்தன்.

சுருங்கச் சொன்னால் பேராசிரியர் வித்தியானந்தனார் நல்லதொரு பரம்பரையில் பிறந்தவர். நல்லதொரு பரம்பரையின் கல்வி வாரிசு. தனக்குப்பின் தமிழியலை வளர்க்கக் கூடிய நல்லதொரு வாரிசான பரம்பரையை உருவாக்கியவர். இந்தப் பரம்பரை தமிழியல் வளர்ச்சியைப் போற்றிப் பேணும் என்பதில் ஐயம் இல்லை.

★

# கத்தோலிக்க மாணவர் ஒன்றியம் அனுதாபம்

காலம் சென்ற பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களின் மறைவை ஒட்டி மிகுந்த கவலையடைகின்றோம். அவர் கடந்த பத்து ஆண்டுகளாக யாழ் பல்கலைக் கழகத்திற்கு துணைவேந்தராக இருந்து ஆற்றிய சேவைகள் அளப்பரியன. மிகவும் இக்கட்டான சந்தர்ப்பங்களில் உறுதியுடன் அவர் பல்கலைக் கழகத்தை கொண்டு நடத்தியது குறிப்பிடத்தக்கது அவரது இழப்பு பல்கலைக் கழகத்திற்கு மட்டுமல்ல தமிழுக்கும் தமிழ் சமுதாயத்திற்கும் கூட ஈடு செய்ய முடியாத ஓர் வெற்றிடத்தை ஏற்படுத்தி உள்ளது.

யாழ் பல்கலைக் கழக கத்தோலிக்க மாணவர் ஒன்றியம் விடுத்த அனுதாபச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

பரந்த மனப்பான்மையுடன் அனைவருக்கும் சேவை செய்த அவரது நற்பண்பை நன்றியுடன் நினைவுகூரும் அதேவேளை அவரது இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், இலக்கிய ஆர்வலர்களுக்கும் யாழ் பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர் ஒன்றியத்தின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். என்றும் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ)

# சங்கதி தெரியுமா?

## ஹரகிரி தற்கொலை!

யப்பானிய சக்கரவர்த்தி ஹிரோகித்தோவின் மரணமும் மரணப் படுக்கையும் உலகச் செய்தி நிறுவனங்களின் பெரும் கவனத்தைப் பெற்றன.

அவருடைய ஈமக்கிரியை வைபவங்களுக்குச் சுமார் 8 கோடி அமெரிக்க டாலர் செலவாகும் என்று மதிக்கப்பட்டிருக்கிறது. அதாவது 240 கோடி ரூபா!

இதில் 2 கோடி டாலர் வைபவத்தில் கலந்து கொள்ள வரும் வெளிநாட்டுப் பிரமுகர்களுக்குப் பாதுகாப்பு வழங்கச் செலவழிக்கப்படும்.

இதற்கிடையில் ஹிரோகித்தோ பற்றிய மதிப்பீடு, உலகப் பல்வேறு நாடுகளில் செய்யப்படுகிறது. இரண்டாம் உலக யுத்த காலத்தில் யப்பான் இராணுவ வெறியர்கள் இழைத்த கொடுமைகளுடன் காலஞ்சென்ற சக்கரவர்த்தியையும்இணைத்து பார்க்கின்றார்கள் பலர்.

அவரை எப்பொழுதோ சுட்டுக் கொன்றிருக்க வேண்டும் என்று கூட மிகவும் சூடாக ஒரு வெளிநாட்டுத் தலைவர் கூறியிருக்கிறார் பிரிட்டிஷ் இராணியின் கணவரான பிலிப் இளவரசர் ஈமக்கிரியை வைபவத்தில் கலந்துகொள்வது பற்றி காரசாரமான வாத விவாதம் பிரிட்டனில் ஏற்பட்டிருக்கிறது.

இது ஒருபுறம் நடைபெற, மறுபுறத்தில் சக்கரவர்த்தி விசுவாசிகள் அவருடன் சொர்க்கம் செல்வதற்காகத் தற்கொலை செய்துகொண்டிருக்கிறார்கள்.

மூன்று பேர் சாதாரண தற்கொலை செய்து கொண்டார்கள். இன்னும் ஒருவர் ஹர - கிரி என்ற பிரத்தியேக யப்பானிய தற்கொலையைச் செய்து கொண்டார். ஹர - கிரி என்றால் தானே தன் வயிற்றை வாளால் வெட்டிக் கிழித்து மரணம் அடைவதாகும்.

யப்பானிய இராணுவத்தினர் தான் வழக்கமாக இந்த முறையிலான தற்கொலையைச் செய்து கொள்வார்கள். தோற்கும் போதெல்லாம் அவர்கள் எதிரிகளிடம் சரண் அடைவது குறைவு. போனசே சக்கரவர்த்தி அதாவது வாழ்க சக்கரவர்த்தி என்று கூறிக்கொண்டே ஹர-கிறி செய்து கொள்வார்கள்.

யப்பானியர் கைப்பற்றிய நாடுகளில் அவர்கள் தோல்வி அடைந்தபோது யுத்தக் கைதிகள் குறைவாக இருந்ததற்கு இதுதான் காரணம் என்று கூறப்படுகிறது.

இரண்டாம் உலக யுத்தத்தின்போது யப்பான் கடைப்பிடித்த கொள்கைகளைப் பொறுத்து மறைந்த சக்கரவர்த்திக்கு எவ்வளவு பொறுப்புண்டு என்ற கேள்வி இப்பொழுதே எழுந்துள்ளது.

செய்திக் கவர்ச்சியில் மயங்கி இருக்கும் யப்பானிய மக்களும் மற்றவர்களும் இதுபற்றி ஆழமாக சிந்திக்கும்போது பல உண்மைகள் வெளிவரும்.

★ ★ ★

## இலங்கையின் தலைநகரம் எது?

ஒரு சாதாரண கேள்வி, இலங்கையின் தலைநகரம் எது? முன்னர் என்றால் பதில் பக்கென்று வந்திருக்கும். ஆனால் இப்பொழுது இதுவும் சிக்கலாக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கேள்வியை நான் மாணவர்களிடமும் கேட்டுவிட்டு விஷயம் அறிந்த பெரியவர்களிடமும் கேட்டேன். அத்துடன் ஜெயவர்த்தனபுரமா? கொழும்பா? என்ற மடக்கையும் போட்டு வைத்தேன்.

உண்மையில் திணறிவிட்டார்கள். கொழும்பு— வர்த்தகத் தலைநகரம், ஜெயவர்த்தனபுரம் — நிர்வாகத் தலைநகரம் என்றுதான் பதில் கண்டோம்.

இலங்கையின் தலைநகரம் ஜெயவர்த்தனபுரம் என்று அரசாங்கப் பிரசுரம் ஒன்றில் இருக்க நான் கண்டேன்.

இந்தத் தலைநகரச் சிக்கலை யோசிக்கும்போது தான் இன்னொரு பிரச்சினையும் எனது நினைவுக்கு வருகின்றது.

## அரசியல் யாப்பா? சஞ்சிகையா?

இலங்கை அரசியல் யாப்புப் பற்றிய விஷயம் அது.

முந்தி என்றால் டொனமூர் அரசியல் யாப்பு, சோல்பரி அரசியல் யாப்பு...... இப்படி தெட்டத் தெளிவாக யாப்பைப் பற்றிக் குறிப்பிட முடியும்.

ஆனால் இன்றோ?

எதெப்பா சிறீலங்கா மக்கள் குடியரசின் யாப்பு என்றால் இலேசாக அதனைக் கண்டுபிடித்து விடமுடியாது. அதிலும் யாப்புக்கு ஏற்பட்டிருக்கும் திருத்தங்கள் எண்ணற்றவை. இது தான் எமது அரசியல் யாப்பு என்று ஒருவர் உறுதியாகக் கூற முடியாதளவிற்கு அது உருச் சிதைக்கப்பட்டிருக்கிறது.

இப்பொழுது அரசியல் யாப்பு விஷயங்கள் பற்றி ஒருவர் பேசும்போது அவர் எவ்வளவுதான் விஷயம் தெரிந்த அறிவு படைத்த மனிதன் என்றாலும் ''நான் அறிந்தவரை'' என்ற பீடிகையுடன் பேசுவதை நாம் காண்கின்றோம்.

1972இல் தடபுடலாக மாற்றப்பட்ட அரசியல் யாப்பு (கொல்வின் யாப்பு?) இன்று செல்லுபடியாகாது.

இந்த யாப்பு மாற்றங்களில் தான் எவ்வளவு நேர விரயமும் பண விரயமும் ஏற்பட்டிருக்கும்?

1972 யாப்பு மாற்றத்தைப் பற்றி அக்கால ஆளும் கட்சியின் திலகங்களில் ஒருவர் என்னிடம் கூறியது இன்றும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

''முழு உலகமுமே எமது அரசியல் யாப்புத் திருத்தத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறது. அத்தகையதோர் முன்மாதிரியாக எமது மாற்றம் அமையும்.

இந்த டம்பப் பேச்சு நீண்ட நாள் நின்று பிடிக்கவில்லை.

இந்த இடத்தில் எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகின்றது. லண்டனில் உள்ள ஒரு கடைக்குச் சென்று, இலங்கை அரசியல் யாப்பு (Constitution) இருக்கின்றதா என்று ஒருவர் கேட்டாராம்; ''நாங்கள் வார சஞ்சிகையோ, மாத சஞ்சிகையோ விற்பதில்லை'' என்று கடைக்காரர் பதிலளித்தாராம்.

— செய்திநேசன்

# யாழ்ப்பாண மாணவர்களிடையே

# பெருகிவரும் பல் வியாதி

## சுகாதாரமும் கல்வியும் இணைந்து செயற்படுவதன் மூலம் இதனை நிவர்த்திக்கலாம்

யாழ்ப்பாணம் ஆரம்பப் பாடசாலை சுகாதாரக் கல்வி திட்டமிடல் கருத்தரங்கு இம்மாதம் 11ஆம் திகதி யாழ் இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. யாழ். பிரதம கல்வி அதிகாரி திரு. கே. கந்தசாமி தலைமை வகித்த இக் கருத்தரங்கில் யாழ். கல்விப் பணிப்பாளர் திரு வெற்றிவேலு சபாநாயகம், யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் என். கனகசபை, யாழ். மாவட்ட தாய் சேய் நல வைத்திய அதிகாரி டாக்டர் (திருமதி) ஜி பொன்னம்பலம், யாழ். மாவட்ட பல் வைத்திய அதிகாரி டாக்டர் கிருஷ்ணராசா ஆகியோர் உரையாற்றினார்கள். அவர்களுடைய கருத்துக்களின் தொகுப்பு ஒன்றைக்கீழே தருகின்றோம்.

**சபாநாயகம்**

இக் கருத்தரங்கு சுகாதாரமும் கல்வியும் ஒன்றிணைந்து செயல்படவும் இறுதியில் கூட்டு நடவடிக்கையில் ஈடுபடவும் வழிவகுக்க ஒழுங்கு செய்யப்பட்டது பாடசாலை மாணவர்கள் சுகமாக வளர வாய்ப்பளிக்கவும். நோய்கள் வராமல் தடுக்கவும், விசேடமாக சிறுவயதிலிருந்தே மாணவர்களுக்கு சுகாதார அறிவூட்ட வேண்டும். மாணவர் மூலம் முதியோர் சுகாதாரத்தைப் பேணமுடியும்.

பல்நோய் 68 வீதம் மாணவர்களிடையே காணப்படுவதாக அறிகிறேன். சிறுவயதிலிருந்தே மாணவர்களுக்குப் பல் வியாதி பற்றி அறிவுறுத்தவேண்டும். கொதித்தாறிய நீரைக் குடிக்கப் பயன்படுத்தல் பற்றிப் பெற்றோர்களும் மாணவர்கள் மூலம் அறியமுடியும்;

மேற்கு ஜேர்மனியில் தாதிமாரின் வேலைகளை வைத்தியர்கள் செய்கிறார்கள். தாதிமார்பயிற்சி மூலம் சமுதாயத்திற்கு நீரிழிவு போன்ற நோய்களைத் தடுக்கும் முறை பற்றி நோயாளருக்கும். சமுதாயத்திற்கும் அறிவுறுத்துகிறார்கள் ஏரி நீரைக் குடிப்பதனால் நோய்கள் வருமெனத் தெரிந்திருந்தால் தாகம் இருந்தாலும் குடிக்காமல் வரலாம். தொற்றுநோய்கள் பரவுதல்பற்றி அறிந்திருந்தால் பாடசாலையில்மட்டுமல்லாது, சமுதாய வாழ்விலும் புத்துணர்ச்சியை ஏற்படுத்தலாம்.

**டாக்டர்என்.கனகசபை**

மாணவர்கள் நலனில் கூடிய பங்கு எடுக்கும் பொறுப்பு கல்வித்திணைக்களத்திற்குண்டு. பாடசாலை ஆசிரியர்களின் கவனிப்பில் மாணவர்கள் அதிக நேரமுள்ளனர்: காலையில்ஆசிரியர் மாணவர்களைப் பரிசோதனை செய்வதின் மூலம் பல குறைபாடுகளை இனங்காணலாம், பாடசாலை- சமுதாய சுகாதார இலாகாத்தொடர்புகள்குறைந்து கொண்டு போகின்றன.

பெற்றோரும் மாணவரின் வைத்தியப்பரிசோதனையில் கலந்து கொள்வதில்லை. வைத்தியர்கள், தாதிமார் பற்றாக்குறையால் வேலைப் பளு கூடிய கட்டத்தில் கல்வித் திணைக்களத்தின் உதவி தேவைப்படுகின்றது.

பாடசாலைப் பிள்ளைகளைப் பொறுத்தமட்டில் சுகாதாரப் பழக்கவழக்கங்களைப் பாடசாலையிலேயே பழகிக்கொள்ள வேண்டும் வைத்தியபரிசோதனையின் போது மாணவர்களிடையே காணப்படும் குறைபாடுகளுக்குப் பரிகாரம் தேட வேண்டும். குறைபாடு காரணமாகப் பாடசாலைக்கு வராமை, வாசிக்கும் போது கஷ்டப்படுவது, காதுகேட்டல் குறைபாடு என்பனவற்றைக் கண்டுபிடித்து அண்மையிலுள்ள வைத்தியசாலைக்கு அனுப்பி நிவாரணம் பெற வேண்டும். பயிற்சிபெறும் தாதிமார், குடும்ப நல [illegible] பற்றிக் கற்பிக்கப்படுகிறது. போதிய தகவல், அறிவு, செயல் முறை தெரிந்திருந்தும் அவற்றைச் செயல்படுத்துவோர் குறைவு. இருபகுதியினரும்சுகாதாரத்தை மேம்படுத்தவேண்டும்.

**டாக்டர் திருமதி ஜி. பொன்னம்பலம்**

சமுதாய வாழ்விற்கு உடல், உள, சமுதாயநன்னிலை அவசியமாகிறது. பாடசாலை மாணவர்களின் சுகாதாரக் குறைபாடுகளால் அவர்களது கல்வி பாதிக்கப்படுகிறது. அதனை அறிந்து அவற்றை நிவர்த்திசெய்வது எல்லோரினதும் கடமையாகும். வைத்தியபரிசோதனை குறைபாடுகளை அறிதல், அவற்றை நிவர்த்தி செய்தல், தடை மருந்து கொடுத்தல், புழு [illegible] ற்றுடல் சுகாதபரம் குடிநீர், சுகாதாரக்கல்வி, வயது உயரம் நிறை சராசரி நிறை பார்த்தல், போஷாக்கு நிலை அவதானித்தல், கண் பரிசோதனை செய்தல் தோல், காது, மூக்கு, வாய், தலை முதலிய பரிசோதனைகள் பற்சிகிச்சை மனநோய், இரத்தச்சோகை ஆகியன முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியவை. மேற்கு நாடுகளில் பேன உள்ள மாணவர்களை பாடசாலைகளில் அனுமதிப்பதில்லை,

**டாக்டர் கிருஷ்ணராசா**

நோய்கள் பழக்க வழக்கங்கள் உணவு முறைகளோடுதொடர்புடையவை. மேற்கு நாடுகளில் 30-40 வீதம் பல்வியாதிகள் உண்டு எமதுபகுதியில் 68 வீதமுண்டு, இனிப்பு, மாப்பதார்த்தம் அதிகமாக உண்பதால் பல வியாதிகள் ஏற்படுகின்றன; ரியூசன் அவசரத்தில் பாடசாலை மாணவர்கள் தமது பற்களை நல்ல முறையில் துலக்குவதில்லை. யாழ் மாவட்டத்தில் பல்வியாதிகள் மாணவரிடையே முதலிடம் வகிக்கிறது.

(க-18)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உ

## இருது சோபன விஞ்ஞாபனம்

நிகழும் விபவ ஆண்டு தைத்திங்கள் 16 ஆம் நாள் (29-01-89) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியின் மேல் வரும் மீனலக்கின சுப முகூர்த்தத்தில் எமது சிரேஷ்ட புத்திரி செல்வி கிருபாலினிக்கு நடைபெறவிருக்கும் இருது சோபன நீராட்டு விழாவில் கலந்து எம் செல்வமகளை ஆசிர்வதிக்குமாறு உற்றார், உறவினர் நண்பர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்

இங்ஙனம்

மு சந்திரலிங்கம் (லிங்கம்),
சசிதேவி குடும்பத்தினர்,
லிங்கம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்

வல்வெட்டித்துறை (9082)


## மாணவர் போட்டி

யாழ்ப்பாணம், ஜன 27

திருநெல்வேலி மகாத்மா ஜீ சனசமூக நிலையத்தில் தைப்பொங்கல் தினத்தன்று மாணவர் பேச்சுப்போட்டி, கவிதைப்போட்டி, விளையாட்டுப்போட்டி முதலியன இடம்பெற்றன.

நிலைய போஷகர் திரு. செ. ப. ஜீவானந்தம் விழாவுக்குத் தலைமை வகித்தார்.

செல்வன் அ. வேணுகோபால், செல்வன் க. ஜெயந்திரன், செல்வன் வ. தேவராசா, செல்வன் செ தவராசா, திரு. வ. கோபாலபிள்ளை செயலாளர் திரு. வ. உலகநாதன் ஆகியோர் அதில் உரையாற்றினர்கள். (அ)


## கேள்வி அறிவித்தல்

### பிரதேச கல்வித் திணைக்களம், முல்லைத்தீவு.

**ஆசிய அபிவிருத்தி வங்கி - கல்விப் புனருத்தாபனத் திட்டத்தின் கீழ் முல்லைத்திவு மாவட்டப் பாடசாலைகளின் கட்டட வேலைகள்**

கீழ் குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் முல்லைத்தீவு பிரதேச கல்வித் திணைக்கள கேள்வச் சபைத் தலைவரால் 1989-ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு வேலைக்கும் எதிரேயுள்ள தொகைக்கு அல்லது அதனிலும் கூடிய தொகைக்கு கட்டிட திருத்த வேலை செய்வதற்கென கல்வித் திணைக்களம், சட்டு வேலைத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், கட்டிடத் திணைக்களம் ஆகிய ஏதாவதொரு திணைக்களத்தில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு 1989-ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 13-ந் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிவரை மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணமாக ரூபா ஐம்பதும் (ரூ. 50/-) மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா இருநூற்றி ஐம்பதும் (ரூ 250/-) செலுத்தியதன் பேரில் கேள்விப் பத்திரங்கள் முல்லைத்திவு பிரதேச கல்வித் திணைக்களத்தால் வழங்கப்படும். கேள்விப் பத்திரப் பணம், கேள்வி வைப்புப் பணம் ஆகியன வங்கிக் கட்டளையாகவோ அல்லது காசு கட்டளையாகவோ செலுத்தப்பட வேண்டும். கேள்விகள் 1989-ஆம் ஆண்டு பெப்ரவரி 21-ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 10-30 மணிக்கு முல்லைத்திவு கல்வித் திணைக்களத்தில் திறக்கப்படும். அச்சமயம் கேள்விக்காரர் சமுகம் அளிக்கலாம்.

தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் அது பற்றி அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து பத்து நாட்களுக்குள் ஒப்பந்தம் கைசாத்திட வேண்டும். தவறின் தெரிவு மறு அறிவித்தல் இன்றி இரத்து செய்யப்படும்.

மேலதிக விபரங்களை முல்லைத்திவு பிரதேச கல்வித் திணைக்களத்தில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

கலாநிதி செல்வி சிரோன்மணி இராஜரத்தினம்,
பிரதேச கல்விப் பணிப்பாளர்,
முல்லைத்திவு

பிரதேச கல்வித் திணைக்களம்,
முல்லைத்திவு. 24.01.1989

| பாடசாலையின் பெயர் | வேலை விபரம் | பதிவு செய்திருக்க வேண்டிய தொகை |
|---|---|---|
| 1. முல்லைத்தீவு ம. வித்தி. | பெருந்திருத்த வேலை | 400,000/- |
| 2. செம்மலை ம. வித்தி. | ,, | 400,000/- |

(C1376)


யாழ் பல்கலைக்கழக

# கல்வி டிப்ளோமாவுக்கு அனுமதிக்கப்பட்டோர்

யாழ்ப்பாணம், ஜன. 27

யாழ். பல்கலைக் கழகத்தினால் நடத்தப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கான 'கல்வி டிப்ளோமா' அனுமதிப் பரீட்சையில் முழுநேர, பகுதிநேரப் பயிற்சிகளுக்கு அனுமதிக்கப்பட்டோர் வருமாறு'

**முழுநேரப் பயிற்சி**

திரு. கே. பாலசெங்காதரன், திருமதி பி பாலமேகலா, திருமதி எம். பி. பஷீர், திருமதி கே. குணம், திரு. எம். கந்தசாமி, திரு. பி. கணேசன், செல்வி எம். மகாதேவன், திரு. எஸ் மகாகணபதி, திருமதி எஸ். மகேந்திரராசா, திரு. என். பி. முகமது சுல்த்தான், திரு. ஜி. நடராஜா, திரு வி பஞ்சலிங்கம், செல்வி என் எச் றெயிசின் திரு என் சதீர், திருமதி பி சிதம்பரநாதன், செல்வி எஸ் சிவமலர், திரு எம் வர்ணகுலசிங்கம், செல்வி கே. விஞயகமூர்த்தி

**பகுதிநேரப் பயிற்சிக்குத் தெரிவானோர்**

திரு ரி அருளானந்தம், திரு. எஸ். அருள் சுப்பிரமணியம், திரு ரி பாலசுந்தரம், திருமதி எஸ் பாலேந்திரன், திரு பி ஈஸ்வரநாதன், திரு. ஏ இளங்கோ, திருமதி ஜே எஸ் பேரீடோசி, திரு கே ஞானசம்பந்தன். திரு ஏ ஞானதீசிகன், திரு ஏ ஜெகநாதன், திரு எஸ் ஜெகதீஸ்வரநாதன், திருமதி எஸ் ஜெயராசா, திரு ஆர் கயிலைநாதன், திரு ஏ கே கயிலாயபிள்ளை, திருமதி எஸ் கமலநாதன், திரு கே கனகசிங்கம், திருமதி ஆர் கந்தசாமி, திரு எஸ் கருணேஸ்வரன், திருமதி கே குணராசா.

திரு எஸ் மகாலிங்கம், திருமதி கே மகேந்திரன், திரு எஸ் வி மகேந்திரன், திரு ரி ஜே மங்களநாதன், திரு ஜே மரியநாயகம், திருமதி எஸ் மோகனகிருஷ்ணன், செல்வி பி வைமுருகேசு, திரு ரி முருகையா, செல்வி வி நாகலிங்கம், செல்வி பி நாகரத்தினம், திரு கே நல்லைநாதன், செல்வி என் நல்லையா, செல்வி கே நமசிவாயம் திருமதி ரி நமசிவாயம் திரு என் நவரத்தினராசா, திருமதி எஸ் பதுமநாதன், திருமதி எஸ் விஜயநாதன், திரு எஸ் பஞ்சலிங்கம், திருமதி எல் பரராஜசிங்கம், திரு எஸ் பரராஜா, திரு என் பத்மநாதன். திருமதி வி பேரின்பநாதன், திருமதி பி இராஜலிங்கம், திரு என் இராஜரத்தினம், திரு எம் இராஜஸ்காந்தன், திருமதி எஸ் சச்சிதானந்தன், செல்வி ஆர் சம்பந்தன் செல்வி எஸ் செபஸ்தியாம்பிள்ளை, செல்வி எஸ் செல்லத்துரை, திருமதி சி சண்முகராஜா, திரு வி சிற்றம்பலம், திரு வி. சிவகுமாரன்.

திருமதி கே செல்வராசா, திரு கே சிவநாதன், செல்வி எஸ் சிவப்பிரகாசம், திருமதி பி எஸ் ஸ்கந்தராசா செல்வி கே சோமசுந்தரம், செல்வி பி ஸ்ரீசுப்பிரமணியம், செல்வி என் சுப்பிரமணியம், திருமதி எஸ் சுரேந்திரன், திரு பி சென்றேக், திரு. என் தர்மபாலன், திரு வி தவராஜா, திருமதி ஜி தெய்வேந்திரராசா, திரு ரி தில்லைநடேசன், செல்வி ரி தியாகராசா திருமதி வி வாமதேவன், திரு எஸ் வரதராசா, திருமதி பி வெற்றிவேலு, திரு கே விஜயநாதன், திருமதி என் விஸ்வநாதன், திரு எஸ் வில்வலிங்கம், திரு ஏ யோகானந்தா, திரு என் யோகராசா, திருமதி ஜி யோகேஸ்வரன், செல்வி ஏ யோகேஸ்வரி. (ச)


## பாதிக்கப்பட்ட பத்திரிகையாளர் புனர்வாழ்வு முயற்சிக்கு விபரம் சேகரிப்பு


இலங்கையில் பிரசுரமான சகல தமிழ் பத்திரிகைகளிலும் எத்தரத்திலும் பத்திரிகைத் தொழிலில் தொடர்புடையவராக இருந்து 1983 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை பாதிக்கப்பட்டு. வேலை இழந்த பத்திரிகைத் துறைசார் ஊழியர்கள் யாவரும் உடனடியாக சுய விபரம், வேலை செய்த ஸ்தாபனம், ஈடுபட்டிருந்த தொழில் ஆகிய விவரங்களை எமக்கு அறியத் தரவும்

பத்திரிகை புனர்வாழ்வுக் குழுமம்,
உதயன் மே/பா

(9277)



## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



கணபதிப்பிள்ளை யோகேஸ்வரன்
(கணபதிப்பிள்ளை & சன்ஸ் - பளை)

மலர்வு: 18 - 09 - 1958 உதிர்வு: 14 - 12 - 1988

சாகாவரம் பெற்றோர் சகத்தினிலே
இல்லையென்றும்
தேகம் இது என்றோ தீயினிலே
வேகுமென்றும்
வாகாய் நாம் இங்கே வடிவாய்
அறிந்த பின்னும்
யோகா நின்பிரிவால் நாம்வேதனையில்
வெம்புகின்றோம்.

அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு எமது துயரினைப்பகிர்ந்து கொண்டவர்கள், இன்றைய அந்தியேட்டிக்குச் சமுகம் தருபவர்கள், பலவிதங்களிலும் காலத்தினால் உதவிகள் செய்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

உமது பிரிவால் துயருறும்:
தந்தை, தாய் சகோதர,
சகோதரிகள், மைத்துனர்,
உறவினர்கள், நண்பர்கள்.

'இரஞ்சிதபவனம்'
சண்டி வீதி,
கொடிகாமம். (9280)



## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் உயர்திரு
நாகலிங்கம் பொன்னுத்துரை

ஜனனம்:- 04 - 12 - 1920 அமரத்துவம்:- 07 - 02 - 1988

திதி.- 27 - 01 - 1989

எங்கள் இதயத்தில் நீங்காத ஞானச்சுடராக நிலைத்திருக்கும், எங்கள் குடும்பத்தின் மூலமூர்த்தி, தளராத நெஞ்சுறுதியுடனும், கீர்த்தியுடனும், வாழ்ந்து, பாசத்துடனும், பண்புடனும் எமக்கு நலமான வாழ்வு தந்து, நாடி வந்தவர்க்கு நன்னெறி காட்டி, ஞானமொழி பேசிய எங்கள் குலதெய்வம் எம்மைப் பிரிந்து இறைவனோடு இணைந்து இன்று ஓர் ஆண்டு நிறைவு பெறுகிறது. இவ்வேளையில் நாம் மானசிகமாகப் பணிவன்புடன் வணங்குகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சிவன் வீதி,
உரும்பராய். (9044)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி லலிதராணி யோகேஸ்வரன்
[மேற்பார்வையாளர்,
தொலைத்தொடர்பு திணைக்களம்]

தோற்றம்: 30 - 10 - 1936 மறைவு: 28 - 12 - 1988

எமது குடும்பத்தின் குலவிளக்காய்த் திகழ்ந்து அமரரான, அன்னாரது மரணச் சடங்கில் பங்கு பற்றியும் ஆறுதல் கூறியும் எமது துயரில் பங்கு கொண்ட சகலருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று வெள்ளிக்கிழமை [27-01-1989] வட்டுக்கோட்டையிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும் 31ஆம் நாள் நினைவு அஞ்சலி ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் வீட்டுக்கிருத்தியத்திலும் வந்து பங்கு கொள்ளுமாறு உறவினர்களையும் நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

த. சிவலிங்கம்
[சகோதரர்]

அலோக்க ஒழுங்கை,
வட்டுக்கோட்டை. [9083]



WHEN YOU WANT TO OPEN THE RIGHT DOORS
IN SRI LANKA
REMEMBER

**SHABRA**

We have proved **S**tability
We have shown **H**onesty
We are very much **A**dvanced
We have the most **B**acking
We are so **R**eliable
Thats why we are on the move **A**head

For more details please contact:

**Shabra Unico Finance Limited**

207, Power House Road,
JAFFNA.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**

மிகல் மேவல் மெய்ப்பொருள்
காணார் இகல்மேவல்
இன்னா அறிவி னவர்

**பொருள்:**

இகலை விரும்புகின்ற தீய அறிவை உடையவர் வெற்றி பொருந்துதலுக்குக் காரணமான உண்மைப் பொருளை அறிய மாட்டார்.


# உதயன்

உண்மை - நேர்மை - ஐக்கியம்

இல. 292/1 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
27. 1. 1989 உ. வெ. இல52


## பிராண வேதனை வேண்டாம்!

வட பிராந்தியத்தில் வழமையான பஸ் சேவைகளைச் சீராக நடத்துவதற்கு ஆகக் குறைந்தது இன்னும் 260 பஸ்கள் தேவை.

முன்னர், வடபிராந்தியம் முழுவதும் 400க்கும் அதிகமான பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன. இப்போது சுமார் நூறு பஸ்களே சேவையில் ஈடுபடுகின்றன. அவற்றிலும் அனேக பஸ்கள் அடிக்கடி திருத்தப்பட வேண்டியவை.

ஆகையால் போதிய பஸ்களும் உதிரிப் பாகங்களும் வந்து சேர்ந்தாலே வடபகுதி பஸ் சேவையைச் சீர் செய்ய முடியும்.

வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் தலைவர் திரு. எஸ். கனகரத்தினமே மேற்கண்ட நிலைப்பாட்டை விளக்கி உள்ளார்.

பஸ் சேவை ஒழுங்காக நடப்பதில்லை என்று பிரயாணிகள் அடிக்கடி குறைப்படுவதின் பின்னணி இப்போது புரிகிறது.

ஒரு பாதையால் செல்லும் நான்கு அல்லது ஐந்து மினிபஸ்கள் சென்ற பின்னர், அவற்றுக்குப் பொதுவாக ஒரு பஸ் மட்டுமே அந்தப் பாதை நோக்கிச் செல்வதை யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் போய் நின்றால் அவதானிக்கலாம்.

இந்த நிலை ஏன் என்று விசனித்த பிரயாணிகளுக்குப் பதில் கூறும் விதத்தில் திரு. கனகரத்தினம் தெரிவித்த புள்ளிவிபரங்கள் அமைந்திருக்கின்றன.

1983 ஆம் ஆண்டிற்குப் பின்னர், வ. பி. போ. சபையின் பஸ்களின் எண்ணிக்கை வருடாந்தம் குறைந்தும், பழுதடைந்தும் வந்தது எல்லோரும் அறிந்த விடயங்களே.

இந்த நிலை பிரயாணிகளை பெரும் கஷ்டங்களுக்குள் ஆழ்த்தியது. சில கட்டங்களில மினி பஸ்களில் மட்டுமே மக்கள் தங்கியிருக்க நேர்ந்தது.

மினிபஸ் சேவைகள் குறித்தும் பிரயாணிகள் அதிருப்தி தெரிவிக்காமல் இல்லை. ஆயினும் ஒரு சில ஒழுங்கீனங்கள், கட்டுப்பாட்டின்மைகள் தவிர மினி பஸ் சேவைச் சங்கங்கள் பயணிகளின் நலன்களை பூர்த்தி செய்து வருகின்றன என்பதை மறந்துவிடுதல நன்றல்ல.

எனினும், பஸ் சேவைகள் தொடர்ந்து சீரில்லாமல் இருக்கிறது

அதனைப் பயன்படுத்தித் தனியார் போக்குவரத்துச் சேவை ஏகபோக நிலையைக் கைப்பற்றவும் —

அவ்வாறு கைப்பற்றிய நிலையில் பிரயாணிகள் மீது "குதிரை விடவும்" — அனுமதிக்க முடியாது.

அரச பஸ் சேவையும், தனியார் போக்குவரத்துச் சேவையும் போட்டி போட்டுக்கொண்டு பிரயாணிகளுக்குச் சௌகரியமான சேவையை வழங்கும் நிலை உருவாக வேண்டும்.

அதுவே ஆரோக்கியமான நிலை. அதற்காக அரச துறை, தனியார்துறை பயணிகள் ஆகிய முத்தரப்பாரும் ஒருவரோடு மற்றவர் புரிந்துணர்வுடன் ஒத்துழைக்க வேண்டும்.

தமிழ்ப் பகுதிகளில் பிரயாணம் பிராண வேதனையாகவே நெடுங்காலமாக இருந்து வருகிறது. அந்த நிலை நீடிக்காது இருக்க நடவடிக்கை எடுப்பது சம்பந்தப்பட்ட சகலரதும் பொறுப்பாகும்.

## கிரீஸில் தீவிரவாதிகள் சுட்டு வழக்கறிஞர் பலி

ஏதென்ஸ், ஜன 26

கிரீஸ் நாட்டில் அரச வழக்கறிஞர் ஒருவர் இனம் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

உயிரிழந்தவர் உயர் நீதிமன்றத்தில் பணியாற்றி வந்தார்.

கிரேக்க அரசின் நீதித்துறை அதிகாரிகள் மீது மேற்கொள்ளப்பட்ட மூன்றாவது தாக்குதல் இதுவாகும்.

உடனே அமைச்சரவை அவசரமாகக் கூட்டப்பட்டது.

மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த முகமூடி அணிந்த இரு நபர்களே வழக்கறிஞரைச் சுட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அந்த இடத்தில் சுட்டவர்கள் விட்டுச் சென்ற துண்டுப்பிரசுரங்கள் கைப்பற்றப்பட்டன.

இக்கொலைக்கு 'மே' புரட்சிகர அமைப்பு உரிமை கோரியது (எ)

## பிஜியின் தளபதி திடீர் சுகயீனம்

சுவா, ஜன. 26

பிஜித் தீவுகளின் இராணுவத் தளபதி சிறிவேனி ரபுகா திடீர் சுகயீனம் அடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

இவர் 1987ல் இந்தியவம்சாவழியினரை பெரும்பான்மையாகக் கொண்ட அரசாங்கத்தைக் கவிழ்த்துபதவிக்கு வந்தார்.

பிஜியின் பழங்குடியினரின் ஆட்சி நிலைக்கக் கூடியதான அரசமைப்பு ஒன்றினை அவர்கொண்டு வந்தார். (எ)

## சர்வதேச மாநாடு

ஐ. நா. ஜன 26

மத்திய கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வுகாண சர்வதேச மாநாடு ஒன்றை ஐ நா கூட்ட வேண்டும் என்பதில் அமெரிக்காவும் சோவியத் யூனியனும் இணக்கம் கண்டுள்ளன என்று அறிவிக்கப்படுகின்றது.

பலஸ்தீன விடுதலை இயக்கமும் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவேண்டும் என்பதையும் இரண்டு நாடுகளும் ஏற்றுக் கொண்டுள்ளன. (எ)

## 48 நாடுகள் அங்கம் வகிக்கும்
# கொமன்வெல்த் அமைப்பில் பாகிஸ்தானை ஆதரிக்கப்போவதாக இந்தியா அறிவிப்பு

புதுடில்லி, ஜன. 26

கொமன்வெல்த் நாடுகள் அமைப்பில் பாகிஸ்தானை மீண்டும் சேர்த்துக் கொள்ளும் வாய்ப்பு அதிகரித்துள்ளது.

இதுவரை காலமும் பாகிஸ்தானைச் சேர்ப்பதற்கு முட்டுக்கட்டையாக இருந்து வந்த இந்தியா, இப்போது தானே பாகிஸ்தானை மீண்டும் சேர்ப்பதற்கான விண்ணப்பத்தை முன்மொழியப் போவதாக அறிவித்திருக்கிறது.

கொமன்வெல்த் நாடுகள் அமைப்பில் 48நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

1972 இல் புதிய நாடான பங்களாதேஷ் இந்த அமைப்பில் சேர்க்கப்பட்டது.

கிழக்கு பாகிஸ்தானாக இருந்த இந்த நாடு, இந்தியா பாகிஸ்தானுடன் 1971 இல் நடத்திய யுத்தத்தைத் தொடர்ந்து 'பங்களாதேஷ்' ஆகியது

இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக அப்போது பாகிஸ்தான் பிரதமராக இருந்த ஸுல்பிக்கார் அலி பூட்டோ, கொமன்வெல்த் அமைப்பில் இருந்து விலகினார்.

அதன்பின்னர் பாகிஸ்தானில் சர்வாதிகாரியாக ஸியா - உல் - ஹக் வந்தார்.

மீண்டும் கொமன்வெல்த் அமைப்பில் பாகிஸ்தானைச் சேர்க்க அதிபர் ஸியா முயற்சி எடுத்தார்.

அதை இந்தியா எதிர்த்து வந்தது. சர்வாதிகார ஆட்சி இருக்கும் வரை பாகிஸ்தானைச் சேர்க்கமுடியாது என்று இந்தியா கூறியது

கடந்த நவம்பர் தேர்தலுடன் பாகிஸ்தானில் மீண்டும் ஜனநாயக ஆட்சி பதவிக்கு வந்திருக்கிறது என்று காரணம் காட்டி பாகிஸ்தானின் விண்ணப்பத்தை ஆதரிக்கப்போவதாக அறிவித்திருக்கிறது.

கொமன்வெல்த் நாடுகள் மாநாடு வருகிற அக்டோபரில் நடைபெறவுள்ளது.

## கூடுதல் சுதந்திரம் கேட்டோர்மீது காடைத்தனம் புரிந்ததாக வழக்கு

பிராக், ஜன 26

கூடுதல் ஜனநாயக உரிமை கோரி செக் நாட்டின் பல நகரங்களில் கடந்த சில தினங்களாக ஆர்ப்பாட்டம் நடத்தி வந்த '77 சாசன மனித உரிமைக்'குழுவைச்சேர்ந்தவர்கள்மீது காடைத்தனம் புரிந்ததாக வழக்குத் தொடரப்படவிருப்பதாக பிராக் அரசு அறிவித்து உள்ளது.

நாட்டின் ஆட்சிமுறை ஜனநாயகப்படுத்தப்படவேண்டும் என்று இக்குழு வலியுறுத்தி வருகிறது இது தொடர்பான அரசியல் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் கடந்த ஆறு தினங்களாக நடந்தன.

அவற்றை பொலிஸார் கடுமையான நடவடிக்கைகளை எடுத்து அடக்கி விட்டனர்.

மனித உரிமை சாசனக் குழு, அரசின் அடக்குமுறையைக் கண்டித்ததுடன் அது குறித்து டெலிவிஷனில் விவாதம் ஒன்றை நடத்த முன்வருமாறு அரசுக்குச் சவால் விடுத்துள்ளது. (எ)

## ஆப்கன் உணவு நெருக்கடி ஐ.நா. அதிகாரிகள் விரைவு

ஐ நா, ஜன 26

பட்டினியால் பாதிக்கப்பட்டுள்ள காபூல் மக்களுக்கு உதவ ஐ நா நிவாரண அதிகாரிகளை அனுப்பி வைத்தது

காபூல் நகரில் 3½ லட்சம் பேர் வரையில் உணவுப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது.

நகர மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள குழந்தைகளில் 60 சதவீதமானோர் ஊட்டச்சத்தின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையில் தினமும் 400 மெட்ரிக் தொன் உணவுப்பொருட்கள் மாஸ்கோவில் இருந்து சோவியத் விமானங்கள் மூலம் காபூல் வந்து கொண்டிருக்கின்றன

அதேவேளை - வாகிற மாதம் 15 ஆம் திகதிக்குள் சகல துருப்புக்களையும் விலக்கிக் கொள்ளும் முயற்சியில் சோவியத் ராணுவ அதிகாரிகள் முழு மூச்சுடன் ஈடுபட்டுள்ளனர். (எ)

## லிபியா சம்மதம்

திரிப்போலி, ஜன 26

பிரச்சினைக்குரிய தொழிற்சாலையைப் பார்வையிட சுயேச்சையான நிபுணர்கள் குழு ஒன்றுக்கு அனுமதி வழங்குவது என்று லிபிய அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

இத்தொழிற்சாலையில் ரசாயன ஆயுதங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன என்று அமெரிக்கா குற்றஞ்சாட்டுகின்றது.

'இல்லை, மருந்துகளைத் தயாரிக்கிறோம்'' என்று லிபியா கூறுகிறது.

இத் தொழிற்சாலை, தலைநகரில் இருந்து 50 மைல் தொலைவில் உள்ளது (எ)

## பீஹாரில் அரசியல்நெருக்கடி; சட்டசபை இடைநிறுத்தம்

பாட்னா, ஜன 26

பீஹார் மாநில அரசில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியைத் தீர்க்க இந்திரா காங்கிரஸ் உயர்மட்டத் தலைவர்கள் குழு ஒன்று பாட்னா விரைந்தது

மாநில ஆளுநர் இராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து முதலமைச்சர் பகவத ஜா தலைமையிலான அமைச்சரவையில் இருந்து இரண்டு அமைச்சர்கள் இராஜினாமாச் செய்தனர்.

முதலமைச்சருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டைத் தொடர்ந்தே, ஆளுநர் ராஜினாமாச் செய்தார்.

அதைத் தொடர்ந்து முதலமைச்சரும் இராஜினாமாச் செய்யவேண்டும் என்று இரண்டு அமைச்சர்களும் கோரினர்.

அதற்கு முதலமைச்சர் மறுக்கவே அமைச்சர்கள் ராஜினாமாச் செய்தனர்.

அதைத் தொடர்ந்து மாநில சட்டசபை இயங்குவது இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. (எ)

## கருணாநிதியின் சாதனை

சென்னை, ஜன 26

தமிழக அரசியல் வரலாற்றில் பதவி இழந்த முதலமைச்சர் ஒருவர் மீண்டும் தேர்தலில் வென்று மீண்டும் முதலமைச்சராவது இதுவே முதல் தடவை என்று தெரிவிக்கப்படுகிறது

1976 ஆம் ஆண்டில் அப்போதைய பிரதமர் இந்திரா காந்தியினால் முதலமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்டவர் திரு. கருணாநிதி.

## கிராமமே புதை குழி!

மாஸ்கோ, ஜன 26

பூமியதிர்ச்சியில் பாதிக்கப்பட்ட தாஜிகிஸ்தான் மாநிலத்தில் ஒரு கிராமம் புதையுண்டது.

அங்கு உயிரிழந்த அனைவரும் அந்தக் கிராமத்திலேயே புதைக்கப்பட்டனர்

இதுவரை 280 சடலங்கள் கண்டு எடுக்கப்பட்டன. (எ)

### 2 தலைவர்களின் தொலைபேசி உரையாடல்

மாஸ்கோ, ஜன 26

உறவுகள் வளர தொடர்ந்து பாடுபடுவோம் — இப்படி சோவியத் ஜனாதிபதிமிக்கெய்ல் கோர்பச்சேவ் தொலைபேசியில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் இடம் தெரிவித்தார்.

இரண்டு தலைவர்களும் நல்லெண்ண [illegible] அறிவித்தது. (எ)

## பாதுகாப்புச் செலவை ஜப்பான் அதிகரிக்கிறது

டோக்கியோ, ஜன 26

பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக இந்த ஆண்டில் ஜப்பான் கூடுதலாக செலவு செய்ய உள்ளது.

மூன்றும் உலக நாடுகளுக்கும் இந்த ஆண்டில் அதிக உதவிகளை வழங்கவும் ஜப்பான் முடிவு செய்துள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது,

பாதுகாப்புச் செலவினம் 5 9. சதவீதத்தினாலும் மூன்றும் உலக நாடுகளுக்கான நிதி உதவி 7. 8 சதவீதத்தினாலும் அதிகரிக்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது (எ)

## 'ஜெ' அணியில் இருந்து விலகி
# புலவர் புலமைப்பித்தன் தி.மு.க. வில் சேர்ந்தார்

சென்னை, ஜன. 26

ஜெயலலிதா அணியில் இருந்து விலகி திமு கழகத்தில் சேர்ந்தது ஏன்?' என்று புலவர் புலமைப்பித்தன் விளக்கினார்.

முன்னாள் மேல்-சபை துணைத் தலைவரான புலமைப்பித்தன், அ.தி மு க. வில் இருந்தார்.

எம் ஜி ஆர் மறைவுக்குப் பிறகு ஜெயலலிதா அணியிலிருந்து வந்தார்.

அவர், ஜெயலலிதா அணியில் இருந்து விலகி தி மு. கழக தலைவர் கருணாநிதி முன்னிலையில் தி மு. க. வில் சேர்ந்தார்.

தி மு கழகத்தில் சேர்ந்தது ஏன்? என்பது பற்றி நேற்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

நான் 8 வயது சிறுவனாக இருந்தபோது, "தென் இந்திய நல உரிமை சங்கம்" என்ற இயக்கம் பி டி தியாகராயர், நாயர் போன்ற தலைவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. அப்போது என்னை அந்த இயக்கத்தில் ஈடுபடுத்திக்கொண்டேன்.

### பெரியார்

பின்பு திராவிடக் கழகத்தை தந்தை பெரியாரும், அதன் பிறகு திராவிட முன்னேற்றக் கழகத்தை பேரறிஞர் அண்ணாவும் தொடங்கிய போது தி. மு. கழகத்தில் 23 வருடம் தொண்டனாக இருந்தேன்.

### எம். ஜி ஆர்.

மறைந்த தமிழக முதல்வர் புரட்சித தலைவர் எம். ஜி. ஆர் மீது அன்பு கொண்ட நான் அவர் தி. மு. க. வில் இருந்து விலகியபோது அவருடன் சேர்ந்தேன்.

நான் அ. தி. மு. க. வில் இருந்தாலும் தனி மனிதர் விமர்சனமாக எந்தக் கட்சி தலைவர்களையும்விமர்சிக்கவில்லை.

### சுயநலம்

புரட்சித் தலைவரின் மறைவுக்குப் பிறகு அந்த கட்சியிலுள்ள எல்லோரும் சுயநலத்திற்காக கட்சியை பயன்படுத்த நினைத்தார்கள் அதன் விளைவாக கட்சி உடைந்து சிதறி விட்டது. [illegible] இதைப் பயன்படுத்தி [illegible] இதுவரை ஏதாவது ஒரு திராவிட இயக்க கட்சியோடு சேர்ந்து தமிழ்நாட்டில் வெற்றி பெற்றது காங்கிரஸ் கட்சியாகும்

### இருண்ட ஆட்சி

ஆனால் இப்போது திராவிட இயக்கங்களின் ஆட்சியை இருண்ட ஆட்சி என்று பிரசாரம் செய்யும் அளவுக்கு வந்து விட்டது

இன்று ராஜீவ் காந்தி தலைமையில் உள்ள காங்கிரஸ், இந்தி ஆதிக்க அடையாளச் சின்னம், தமிழ் இனப் பகையின் அடையாளச் சின்னம்.

### தாய்க் கழகம்

அந்தக் கடமையை இன்றைய நிலையில் நான் இணைந்து இருக்கிற என் தாய் கழகத்தின் மூலம் தான் செய்யமுடியும்

### அண்ணா கண்ட ஆட்சி

தமிழுணர்வு காவல் புரியும் அறிவும் இதுதான்; அறனும் இதுதான், படையும் இதுதான். பாசறையும் இதுதான்; வாழும் இதுதான்; கேடயமும் இதுதான் என்பதுதான் தி.மு கழகத்தை பற்றிய மதிப்பாகும் அண்ணா கண்ட தமிழர் ஆட்சியை அந்நியர்கள் கைக்கு போய் விடக்கூடாது என்பதைக் கட்டிக்காக்கும் கடைசி தொண்டனாக என்னை சேர்த்துக்கொள்கிறேன்.

மேற்கண்டவாறு புலமைப்பித்தன் கூறினார்.

## டைனோஸர் எலும்புக்கூடு சீனாவில் கண்டுபிடிப்பு

ஒட்டாவா, ஜன. 26

மங்கோலியப் பிரதேசத்தில் டைனோஸர் எலும்புக்கூடுகள் பல கண்டு பிடிக்கப்பட்டன என்று கனடியவிஞ்ஞானி கடந்த திங்கட்கிழமை அறிவித்தார்.

இந்த எலும்புக்கூடுகள் முன்னர் எப்போதும் கண்டுபிடிக்கப்படாத டைனோஸர் இனத்தினுடையவை என கனடிய விஞ்ஞானி டேல்ரஸ்ஸல் தெரிவித்தார்.

மங்கோலிய பிரதேசத்தில் கோபிபாலைவனத்தில் டைனோஸர் மிருகங்கள் பற்றிய ஆராய்ச்சி 1986 ஆம் ஆண்டில் இருந்து இடம்பெற்று வருகிறது.

கனடிய - சீன ஆராய்ச்சியாளர்கள் கூட்டாக இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

## மீண்டும் மோதல்

பேரூட், ஜன 26

லெபனானின் தென் பேரூட்டில் போட்டி அரபுக் குழுக்களிடையே மீண்டும் மோதல் ஏற்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. (எ)

## கோரிக்கை நிராகரிப்பு

ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்குமபடி இடது சாரி கெரில்லாக்கள் குழு விடுத்த வேண்டுகோளை எல்சல்வடோர் அரசு நிராகரித்து விட்டது.

ஜனாதிபதித் தேர்தலில் கலந்து கொள்வதற்கு வசதியாக செப்டம்பரில் தேர்தலை நடத்தும்படி கெரில்லாக் குழு கேட்டிருந்தது.

இதற்கு அரசமைப்புச் சட்டம் இடம் கொடுக்காது என்று காரணம் கூறி எல்சல்வடோர் அரசு கோரிக்கையை நிராகரித்து விட்டது.

கடந்த 9 ஆண்டுகளாக இந்தக் கெரில்லாக் குழு போராட்டம் நடத்தி வருகிறது

கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி எல்சல்வடோரை ஆட்சி செய்து வருகிறது

## துப்பாக்கியுடன் பள்ளிக்கு வந்த 5 வயது குழந்தை!

நியூயோர்க், ஜன 26

5 வயதான குழந்தை ஒன்று நியூயோர்க் நகரில் உள்ள பள்ளிக்கூடத்துக்கு குண்டுகள் நிரப்பப்பட்ட கைத்துப்பாக்கியுடன் வந்தது

இது அனைவருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது

அந்தக் குழந்தையிடம் விசாரித்ததில் அடையாளம் தெரியாத ஒரு ஆசாமி அந்த துப்பாக்கியை தன்னுடைய பையில் வைத்ததாக கூறியது

அது விளையாட்டுத் துப்பாக்கி என்று ஆசிரியை கருதினார்.

பிறகு அதை எடுத்து பார்த்த பிறகு தான் உண்மையான துப்பாக்கி என்பது தெரியவந்தது

## கென்னடி விமான நிலையத்தில் தீ!

அமெரிக்காவின் சர்வதேச கென்னடி விமான நிலையத்தில் நேற்று ஏற்பட்ட தீவிபத்தில் 21 பேர் காயமடைந்தனர்.

தீ பிடித்த இடத்தில் நின்று கொண்டு இருந்த சுமார் ஆயிரம் பேர் அவசரமாக அப்புறப்படுத்தப்பட்டனர்.

ஓடுபாதையில் நின்று கொண்டிருந்த போயிங் விமானங்கள் பாதுகாப்புக்காக வேறு இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டன. (எ)

## சுழலும் உலகில்

### சீனாவில் 4500 போர் விமானம்!

பீகிங், ஜன 26

சீன விமானப்படை உலகிலேயே 3 ஆவது பெரிய விமானப்படையாக உள்ளது. இதில் 4500 இக்கும் மேற்பட்ட போர் விமானங்கள் உள்ளன.

இதில் ஏராளமானவை மிக நவீனரக போர் விமானங்கள் ஆகும்.

பிளைட் இன்டர் நேஷனல் என்ற பத்திரிகை இந்தத் தகவல்களை வெளியிட்டு உள்ளது.

### படுக்கைமீது தொங்கிய கார்!

பால்டிமோர் ஜன 26

அமெரிக்காவில், மேரிலாந்துப் பகுதியில் பால்டிமோர் நகரைச் சேர்ந்தவர் டைரோன் நெல்சன்.

அவர் தனது வீட்டுப் படுக்கை அறையில் இரவில் தூங்கிக் கொண்டு இருந்தார். திடீரென பயங்கர வெடிச்சத்தம் கேட்டு, அலறியடித்துப் படுக்கையில் இருந்து கீழே குதித்தார்.

பிறகு மேலே பார்த்த போது ஒரு கார் தொங்கிக்கொண்டு இருந்தது.

திருட்டு கார் ஒன்று பொலிசார் விரட்டியதும் கட்டுப்பாடின்றி வேகமாகவந்து டைரோன் வீடுமீது மோதியதாகப் பின்னர் தெரியவந்தது.

இதில் தூங்கிக்கொண்டிருந்த டைரோனின் மனைவி லேசான காயம் அடைந்தார்.

வீடு முழுவதும் காரின் சிதைவுகள் சிதறிக்கிடந்தன.

### சினிமா சண்டை காட்சியில் நடிகர் மரணம்!

டோக்கியோ ஜன 26

ஜப்பானில் சினிமா சண்டைக்காட்சிப் படப்பிடிப்பில் டகியோ கடோ வயது (34) என்ற நடிகரை இன்னொரு நடிகர் உண்மையான வாள் கொண்டு தவறுதலாகத் தாக்கிவிட்டார்.

இதில் அவரது கழுத்துப்பகுதியில் வெட்டு விழுந்தது. ஆபத்தான நிலையில் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட அவர் அங்கு பரிதாபகரமாக இறந்தார்.

### தினம் ஒருவருக்கு தூக்குத் தண்டனை!

ஹராரே, ஜன 26

வெள்ளை இன வெறி ஆட்சி நடைபெறும் தென் ஆபிரிக்கா நாட்டில் அரசை எதிர்த்துப் போராட்டம் நடந்துவருகிறது.

இவ்வாறு போராட்டத்தில் ஈடுபடும் கறுப்பர் இன மக்கள் மீது கொலை வழக்குகள் பதிவு செய்து தூக்குத் தண்டனை விதிப்பதும் அதிகரித்துவருகிறது

இந்நிலை நீடித்தால் அங்கு தினம் ஒருவருக்கு மேல் தூக்கிலிடப்படும் கொடுமை நிகழலாம்.

கடந்த ஆண்டு1988இல் மட்டும் 117பேர் தூக்கிலிடப்பட்டனர்.

மொத்தம் 213பேருக்கு தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டதில் மேற்கண்ட தூக்குத் தண்டனைகள் நிறைவேற்றப்பட்டன.

### ஐ. நா. வுக்கு வேண்டுகோள்

நமிபியாவுக்குத் தென் ஆபிரிக்கா சுதந்திரம்வழங்க எடுக்கும் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யும் ஐ நா அமைதிப்படை வீரர்கள் மற்றும் அதிகாரிகளின் எண்ணிக்கையைக் குறைக்கவேண்டாம் என்று அணிசேரா நாடுகள் ஐ நா வைக் கேட்டுள்ளன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மிளகாய்த் தூள்**

யாழ்ப்பாண முறைப்படியும் சுகாதார முறைப்படியும் தயாரிக்கப்பட்டு

100 gr பக்கட்
1 kg பக்கட்
2 kg பக்கட் நிறைகளில்

விற்பனையாகின்றது தொகையாக ஓடர் செய்பவர்களுக்கு விசேட கழிவு உண்டு.
பெற்றுக் கொள்ள வேண்டிய இடம்:

**அண்ணா கோப்பிக் கடை,**
யாழ்ப்பாணம்.



# உதயன்

27 - 01 - 1989 வெள்ளிக்கிழமை



**உழுந்து மா**

பப்படம், தோசை, வடை முதலிய தேவைக்கு பாவிக்கக் கூடிய முறையில் சுத்தமாகவும் சுகாதார முறைப்படியும் தயாரிக்கப்பட்டு விற்பனையாகின்றது. தொகையாக ஓடர் செய்பவர்களுக்கு விசேட கழிவு உண்டு.
பெற்றுக் கொள்ள வேண்டிய இடம்:

**அண்ணா கோப்பிக்கடை,**
யாழ்ப்பாணம்.


## அறிவிக்கப்பட்டும் இதுவரை பெறாத
# ஆயிரத்து 779 குடும்பங்கள்
# நாளை நிவாரணம் பெறலாம்
### தவறின் பட்டியல்கள் அரச அதிபருக்கு அனுப்பப்படும்

யாழ்ப்பாணம், ஜன. 27

இலங்கை வங்கியின் யாழ். ஆஸ்பத்திரி வீதிக் கிளையில் இதுவரை ஆயிரத்து 779 குடும்பங்கள் தங்களுக்கான மீளக் குடியமர்தல் நிவாரணப் பணத்தைப் பெற்றுக்கொள்ளவில்லையென்று அறிவிக்கப்படுகிறது.

இவர்கள் நாளை சனிக்கிழமை மேற்படி வங்கிக்கிளையில் நிவாரணப் பணத்தைக் காலை எட்டு மணியிலிருந்து மாலை மூன்று மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

சம்பந்தப்பட்டவர்கள் நிவாரணப் பணம் பெறுவதற்கான கடைசித் தினம் நாளையாகும்.

நாளையும் இவர்கள் நிவாரணப் பணத்தைப் பெற்றுக்கொள்ளத் தவறினால் அவர்களுடைய பட்டியல்கள் அனைத்தும் அரசாங்க அதிபருக்குத் திருப்பி அனுப்பப்படும்.

நல்லூர், யாழ்ப்பாணம், கோப்பாய் ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த மேற்படி குடும்பங்களின் எண்ணிக்கை வருமாறு:-

| | |
|---|---|
| ★ நல்லூர் தெற்கு | 91 |
| ★ குருநகர் கிழக்கு | 256 |
| ★ குருநகர் மேற்கு | 136 |
| ★ பத்தமேனி | 72 |
| ★ இடைக்காடு | 99 |
| ★ அச்சுவேலி வடக்கு | 39 |
| ★ அச்சுவேலி தெற்கு | 153 |
| ★ புத்தூர் கிழக்கு | 44 |
| ★ வாதரவத்தை | 69 |
| ★ புத்தூர் மேற்கு | 21 |
| ★ ஆவரங்கால் | 22 |
| ★ சிறுப்பிட்டி | 41 |
| ★ நீர்வேலி | 106 |
| ★ ஊரெழு | 63 |
| ★ உரும்பராய் கிழக்கு | 119 |
| ★ உரும்பராய் மேற்கு | 102 |
| ★ கோப்பாய் வடக்கு | 135 |
| ★ கோப்பாய் தெற்கு | 103 |
| ★ இருபாலை | 108 |

(ஓ-ஐ)

### ★ சங்கானை ★ ஊர்காவற்றுறை உ.அ.அ. பிரிவுகள்:
## ஸ்ரான்லி-பிரதான வீதிக் கிளைகளில் 3368 பேருக்கு நிவாரணப் பணம்

யாழ்ப்பாணம், ஜன 27

யாழ்- மக்கள் வங்கிக் கிளைகளில் இவ்வார இறுதியில் மீளக்குடியமர்தல் நிவாரணம் பெறவுள்ள 3 ஆயிரத்து 368 குடும்பங்களின் பட்டியல் வெளியாகியுள்ளது.

அவற்றின் விபரங்கள் வருமாறு:

சனிக்கிழமை யாழ் ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கிக்கிளையில் நிவாரணம் பெறும் குடும்ப எண்ணிக்கையினர் விவரம் வருமாறு.

சங்கானை
உதவி அரசாங்க அதிபர் பிரிவு

★ அராலி மேற்கு- 242.
★ வட்டுக்கோட்டை கிழக்கு- 456.
★ சங்கானை கிழக்கு- 278.
★ சங்கானை மேற்கு- 48.
★ சங்கரத்தை- 195.
★ வட்டுக்கோட்டை மேற்கு- 31.
★ அராலி தெற்கு- 24.

ஞாயிற்றுக்கிழமை இதே வங்கியில் நிவாரணம் பெறும் குடும்ப எண்ணிக்கையாளர் விபரம் வருமாறு.

சங்கானை
உதவி அரசாங்க அதிபர் பிரிவு

★ சுழிபுரம் கிழக்கு- 240.
★ சங்கானை தெற்கு- 364.
★ சுழிபுரம் மேற்கு- 303.
★ தொல்புரம்- 288.

ஞாயிற்றுக் கிழமை யாழ் பிரதான வீதி மக்கள் வங்கிக் கிளையில் நிவாரணம் பெறும் குடும்ப எண்ணிக்கை யினர் விபரம் வருமாறு.

ஊர்காவற்றுறை
உ. அ. அ. பிரிவு

★ கரம்பன்- 218.
★ காரைநகர் - 278
★ காரைநகர் வடக்கு- 35.
★ காரைநகர் தெற்கு- 359
★ ஊர்காவற்றுறை - 09.

(இ- 10)

## ஸ்ரான்லி வீதிக் கிளையில்

யாழ் ஸ்ரான்லி வீதி இலங்கை வங்கிக்கிளையில் நாளை சனிக்கிழமை ஆயிரத்து 385 குடும்பங்களுக்கு மீளக்குடியமர்தல் நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த பின்வரும் எண்ணிக்கையிலான குடும்பங்கள் நிவாரணம் பெற இருக்கின்றனர்

★ அரியாலை மேற்கு— 485
★ வண்ணார் பண்ணை வடமேற்கு — 488
★ வண்ணார் பண்ணை வடகிழக்கு — 412

(ஓ 10)

### சோக கீதம்

பேராசிரியர் சு. வித்தியானந்தனின் மறைவை ஒட்டி யாழ். பல்கலைக் கழகத்தில் ஒலிபெருக்கியில் சோககீதம் ஒலிபரப்பப்பட்டு வருகிறது.

பல்கலைக்கழக தமிழ் மாணவர் மன்றம், பல்கலைக்கழக ஊழியர் சங்கம் ஆகியன அஞ்சலி சுவரொட்டிகளையும், துண்டுப் பிரசுரங்களையும் வெளியிட்டுள்ளன.

(ஓ-5-69)

### குண்டுவெடிப்பு

கொழும்பு, ஜன 27

இரத்தினபுரி நகரில் நேற்று முன்தினம் காலை குண்டு ஒன்று பலத்த சத்தத்துடன் வெடித்தது.

மூவர் காயமடைந்தனர். அந்த இடத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த கார் ஒன்றும் வான் ஒன்றும் சேதமடைந்தன.

(ஓ-எ)

### குடியரசுத்தின கொண்டாட்டம்

புதுடில்லி, ஜன 27

இந்தியாவின் 39 ஆவது குடியரசுத் தினம் நேற்றுக் கொண்டாடப்பட்டது.

குடியரசுத் தினத்தை ஒட்டி புதுடில்லியிலும் சென்னையிலும் மற்றும் மாநிலத் தலைநகர்களிலும் சிறப்பு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

சென்னை மரினா கடற்கரை அருகே நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழக ஆளுநர் பி. அலெக்ஸாண்டர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். இந்த நிகழ்ச்சியில், இன்று தமிழக முதல்வராகப் பதவி ஏற்கும் கலைஞர் மு. கருணாநிதியும் பங்கு கொண்டார். [உ]

## உணவு முத்திரையின் கால எல்லை நீடிப்பு

யாழ்ப்பாணம் ஜன 27

உணவு முத்திரையின் கால எல்லை நீடிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இதன்படி உணவு முத்திரையின் ஒன்பதாவது இலக்கப்புள்ளி எதிர்வரும் 31 ஆம் திகதி வரை செல்லுபடியாகும்.

மேலும் உணவு முத்திரையின் பத்தாவது இலக்கப் புள்ளி ஜனவரி மாதத்துக்குரியதாயினும் அது எதிர்வரும் பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி வரை செல்லுபடியாகும்.

எனினும் பத்தாவது இலக்கப் புள்ளிகளில் மண்ணெண்ணை முத்திரை செல்லுபடியற்றது எனவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பதினொராவது இலக்கப் புள்ளி பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி வரையும் பன்னிரண்டாவது இலக்கப்புள்ளி மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும்.

இதேவேளையில் பதினொராவது பன்னிரண்டாவது இலக்க உணவு முத்திரைப் புள்ளிகளின் பெறுமதிகள் இரட்டிப்பாக்கப்பட்டுள்ளன.

இது சம்பந்தமான விவரமான சுற்று நிருபம் ஒன்றை யாழ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் தனதுகிளை முகாமையாளர்களுக்கும், உத்தரவு பெற்ற வியாபாரிகளுக்கும் அனுப்பிவைத்திருக்கிறது. (இ-ஐ)

## ஒல்லாந்துக் குழு 31 இல் பரந்தனுக்கு வரும்

யாழ்ப்பாணம், ஜன 27

பரந்தனிலுள்ள மனிதாபிமான பொருளாதார புனர்வாழ்வு அபிவிருத்தி சேவை நிலையத்துக்கு ஒல்லாந்திலிருந்து விசேட குழு ஒன்று எதிர்வரும் 31 ஆம் திகதி விஜயம் செய்யவிருக்கிறது.

மேற்படி நிலையம் கிளிநொச்சி மாவட்டத்தின் பதினைந்து கிராமங்களின் புனர்வாழ்வு வேலைகளை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

பிரஸ்தாப நிலையம் மேற்கொண்டுவரும் வேலைத் திட்டங்களைப் பார்வையிடவும் புதிய திட்டங்களுக்கு நிதி உதவிகளை வழங்குவதற்காக சாத்தியக் கூறுகளை ஆராயும் விதமாகவும் சம்பந்தப்பட்ட குழு பரந்தனுக்கு விஜயம் செய்ய இருப்பதாகத் தெரியவருகிறது.

(ஓ-ஐ)

### வான் தீக்கிரை

கராஜில் நிறுத்தப்பட்டிருந்த வான் ஒன்று வீதிக்கு இழுத்து வரப்பட்டுத் தீக்கிரையாக்கப்பட்டது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 5மணியளவில் யாழ் நாவாந்துறை கடற்கரை வீதிக்கு அண்மையாக—அபூபக்கர் வீதியில் — இடம் பெற்றது. (உ-51)

### யாழ். கோப்பாய் உ. அ. அ. பிரிவு:
## நாளை 65 பேருக்கு ரூபா 4,000 நிவாரணம்

யாழ்ப்பாணம், ஜன 27

உற்பத்தித் திறன் வாய்ந்த தொழில் முயற்சிக்கான நன்கொடைப் பணம் வழங்கும் திட்டத்தின்கீழ் 65 பேருக்கு தலா நாலாயிரம் ரூபா வழங்கப்பட விருக்கிறது.

யாழ் இலங்கை வங்கி ஆஸ்பத்திரி வீதிக் கிளையில் இந்தக் கொடுப்பனவு நாளைசனிக்கிழமை காலை எட்டு மணி முதல் மாலை மூன்று மணிவரை வழங்கப்படும்.

யாழ்ப்பாணம், கோப்பாய் ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த பின்வரும் எண்ணிக்கையானோர் நிவாரணம் பெற இருக்கின்றனர்.

★ கொழும்புத்துறை — 07
★ ஈச்சமோட்டை — 08
★ குருநகர் கிழக்கு — 17
★ நாவாந்துறை — 03
★ சோனகத்தெரு — 01
★ பத்தமேனி — 15
★ ஆவரங்கால் — 14

(ஓ-ஐ)

### யாழ் இந்து...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய அமைதிப்படையின் யாழ் நகரக் கமாண்டன் பிரிகேடியர் காலோனிடம் நேற்று மாலை முறைப்பாடு செய்தது.

இதேசமயம் இச்சம்பவத்திற்குச் சற்று முன்னர் இந்துக் கல்லூரிக்கு அருகில் பிரப்பமகுளம் வீதியில் இடம்பெற்ற மற்றுமொரு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் முஸ்லிம் இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.

ஏ. ஆர். நவாஸ் என்ற இந்த இளைஞர் தற்போது யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

### ஸ்ரீலங்கா...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

படகை மறித்த கடற்படையினர் காயமடைந்தவரை ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லுமாறு திருப்பி அனுப்பியதாகவும் கூறப்பட்டது.

ஊர்காவற்றுறைக்குக் கொண்டு செல்லப்பட்ட அவர், அங்கிருந்து யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டார்.

தொழிலில் ஈடுபட்டிருந்த மற்றொருவர் கடற்படையினரால் கொண்டு செல்லப்பட்டதாகவும் தெரியவருகிறது. (ஓ)

### இன்று பதவி....

[1ம் பக்கத்தொடர்ச்சி]

சிறைச்சாலைகள்.)

4. நாஞ்சில் மனோகரன்; (வருவாய்த்துறை)
5. மு கண்ணப்பன், (போக்குவரத்து, நெடுஞ்சாலை, துறைமுக நிர்வாகம்)
6. கே. பி. கந்தசாமி, (இந்து அறநிலையத் துறை, வீட்டு வசதி, சுற்றுலாத்துறை, வனம்)
7. கோ. சி. மணி; (வேளாண்மை)
8. ஆற்காடு வீராசாமி: (உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு, புள்ளிவிவரம்)
9. பொன். முத்துராமலிங்கம்: (செய்தி, விளம்பரத்துறை, தொழிலாளர் நலன், வேலைவாய்ப்புத் துறை)
10. வீரபாண்டி ஆறுமுகம்: (ஊரக வளர்ச்சித் துறை, உள்ளாட்சித் துறை)
11. துரைமுருகன், (பொதுப்பணித்துறை, சிறுபாசனம்)
12. திருமதி சுப்புலட்சுமி ஜெகதீஸன், (சமூக நலன், ஊரகத் துறை, சத்துணவு)
13 டாக்டர் இராமகிருஷ்ணன் (ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்)
14. டாக்டர் பொன்முடி தெய்வசிகாமணி, (மக்கள் நல்வாழ்வு, மருந்து, நகரமைப்பு, குடிநீர், சுற்றுப்புறச் சூழல்)
15 கே. என். நேரு, (மின்சாரம், பால்வளம்)
16 டாக்டர் சந்திரசேகரன்; (கால் நடை பராமரிப்பு, மீன்வளம்)
[illegible] (கைத்தறி, நகர்ப்புற வளர்ச்சி, குடிசை மாற்று வாரியம்) (உ-எ)


**அறிவித்தல்**
**அகில இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்கம்**

அகில இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்கம் 10 - 01 - 1989இல் அங்குரார்ப்பண கூட்ட தீர்மானப்படி 25-01-1989இல் இருந்து 05-02.1989க்கு இடையில் அனைத்து முதலாளிமாரும் மருதனமடம் அகில இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்கக் காரியாலயத்தில் வந்து பதிவு செய்து தொழிலை நடாத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள் தவறின் சங்கத்தில் எடுக்கப்பட்ட தீர்மானப்படி சம்பந்தப்பட்ட முதலாளி மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

பொன்னுத்துரை தங்கராசா
சங்கத்தலைவர்
[மாகாண சபை உறுப்பினர்]

மருதனமடம். [9078]



**கண்ணீர் அஞ்சலி!**



**சு. வித்தியானந்தன்**

செந்தமிழுக்குத் தொண்டுசெய்து தமிழர் நெஞ்சில் இடம்பெற்ற பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்களுக்கு எம் கண்ணீர் அஞ்சலி.

— நிர்வாகி,
சக ஊழியர்கள்
K. A. Engineers
142, Palaly Road,
Thirunelvely,
Jaffna.

(C/1151)


## மரண அறிவித்தல்கள்

### பேராசிரியர் சு. வித்தியானந்தன்
(யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர்)

பேராசிரியர் சு. வித்தியானந்தன், முன்னாள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் காலமானார். இவர் காலஞ்சென்ற கமலாதேவியின் அன்புக் கணவரும், அருள்நம்பி, மகிழ்நங்கை, அன்புச்செல்வி, இன்பச்செல்வன், சிவமைந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ரொசிட்டா, ராஜ் மோகன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற அம்பிகாபதி, திருமதி கலாவல்லி ஆறுமுகதாசன், காலஞ்சென்ற திருநாவுக்கரசு, தயாநிதி, திருமதி பானுமதி தனபாலசிங்கம், திருமதி இந்துமதி கதிர்காமநாதன், திருமதி இரதிதேவி சிவராசா, மின்பதி, குஞ்சரபதி, குணநிதி ஆகியோரின் அருமைச் சகோதரரும், திருமதி இராசபூபதி தம்பையா, திருமதி புனிதவதி இராமலிங்கம், திருமதி சீதாதேவி கங்காதரன், வைத்திய கலாநிதி இராமச்சந்திரன், அருணாசலம், திருமதி திலகவதி சோதிலிங்கம் ஆகியோரின் மைத்துனருமாவார் அன்னாரின் பூதவுடல் சனிக்கிழமை 28 ஆம் திகதி மாலை 1.00 மணியளவில் ''தமிழகம்'' தெல்லிப்பளையிலிருந்து தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

'தமிழகம்'
தெல்லிப்பளை,

தகவல்:
பிள்ளைகள்.
(9292)

### திரு. சண்முகம் சண்முகலிங்கம்
(ஆசிரியர் யாழ்: இந்துக்கல்லூரி)

யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியர் திரு. சண்முகம் சண்முகலிங்கம் 26 - 1 - 89 இல் அகால மரணமானார். இவர் முன்னைநாள் சண்முகம் புடவை வியாபார உரிமையாளர் சண்முகம் தம்பதிகளின் இளைய மகனும் சண்முகராசா, சண்முகரத்தினம, கமலா ஆகியோரின் சகோதரனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும்.

தகவல்:
ஐ. கனகசபாபதி.

52. ஆடியபாத வீதி,
நல்லூர் மாக்கற். (9107)

### திருமதி செல்லத்துரை நாகம்மா

திருமதி செல்லத்துரை நாகம்மா காலமானார். இவர் மூளாய் தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லத்துரை ஆசிரியரின் மனைவியும் வீரபத்திரன் (உப்புக் கூட்டுத்தாபனம், கல்லுண்டாய்), கனகசபாபதி (கூட்டுறவுப்பரிசோதகர்), சிவசுப்பிரமணியம் (களஞ்சியப் பொறுப்பாளர், தொலைத் தொடர்த் திணைக்களம், யாழ்ப்பணம்), பராசக்தி சிவயோகம், பொன்னம்மா ஆகியோரின் அன்புத் தாயாரும், கணபதிப்பிள்ளை தியாகராஜா (துறைமுக அதிகாரசபை, கொழும்பு), இரத்தினசிங்கம் (வ. பி போக்குவரத்துச் சபை, காரைநகர்), திருமதி வீரபத்திரன், சிவசக்தி (உதவி அரசாங்க அதிபர் பணிமனை, சங்கானை), சாந்தினி ஆகியோரின் மாமியாரும் ஆவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. சிவசுப்பிரமணியம் (மகன்)
மூளாய் தெற்கு,
சுழிபுரம். (C/1154)

### எஸ். சண்முகலிங்கம்
(சமூகக்கல்வி ஆசிரியர் - யாழ். இந்துக் கல்லூரி)

திரு. எஸ். சண்முகலிங்கம் அவர்கள் யாழ் இந்துக் கல்லூரியில் நற்று 26-01-89) அகாலமரணமடைந்தார் என்பதை ஆற்றொணா வேதனையுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் மரணச்சடங்கு பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

ஆசிரியர் கழகம்
யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.
யாழ்ப்பாணம். (C/1155)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 27 - 01 - 1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications [pvt.] Ltd. 292/2 Navalar Road, Jaffna. on Friday 27th January 1989.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org